நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | ஆடி 16 | ஹிஜ்ரி 1427 றஜபு 06 | (01.08.2006) | செவ்வாய்க்கிழமை | இதழ் 304

## அதிரடிப்படை ஆயுதக்கிடங்கில் குண்டுவெடிப்பு!

கொழும்பு—

களுத்துறையிலுள்ள விசேட அதிரடிப் படையினரின் ஆயுதக் கிடங்கு ஒன்றில் நேற்றிரவு பாரிய குண்டுவெடிப்பு இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

நேற்றிரவு 11 மணியளவில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் - ஆயுதக் கிடங்கு தீப்பிடித்து எரிவதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை - (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதலில் சிக்கி திருமலையில் 18 படையினர் பலி

திருகோணமலை—

திருகோணமலை - சேருநுவர பகுதியில் இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற பஸ் மீது நேற்றிரவு நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் 18 படையினர் கொல்லப்பட்டதுடன், ஒருவர் படுகாயமடைந்தார்.

அல்லை - கந்தளாய் வீதியில் 9 ஆம் கட்டை என்ற இடத்தில் நேற்றிரவு 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கிளைமோர்த் தாக்குதலில் 18படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன்- ஒருவர் படுகாயமடைந்தார்.

கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தச்சம்பவத்தில் அதிகளவான படையினர் படுகாயமடைந்ததாகவும், மேலும் பலர் காயமடைந்ததாகவும் திருகோணமலையிலிருந்து பிந்திக் கிடைத்த மற்றொரு தகவல் தெரிவித்தது.

மாவிலாறு பகுதியை நோக்கிய படை நடவடிக்கைக்கென ஏற்றிச்செல்லப்பட்ட படையினரே இந்தத் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மாவிலாறில் கடும் சமர்!

## படை நகர்வு முறியடிப்பு; 20 படையினர் பலி!




திருகோணமலை—

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மாவிலாறு அணையை கைப்பற்றும் நோக்கில் நேற்று மூன்று முனைகளில் பெரும் எடுப்பில் இராணுவக் கொமோண்டோக்கள் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சிகளை முறியடித்துவிட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சமரில் இராணுவத் தரப்பில் 20 படையினர் கொல்லப்பட்டு, சுமார் 50 பேர் காயமடைந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர்.

மாவிலாறு அணையைக் கைப்பற்றும் நோக்கில் கல்லாறு மற்றும் திருமங்கள ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து நேற்று ஆயிரக்கணக்கான படையினர் 'மிசன் வோட்டர் செட்' என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

இராணுவத்தின் கொமோண்டோப் படைப்பிரிவும், பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பிரிவும் இணைந்து முன்னேற்ற நடவடிக்கைகளை நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பித்தன.

மாவிலாறுக்கு வடக்கே 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டப்பிராயில் கிளைமோர் தாக்குதல்

யாழ்ப்பாணம்—

யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள கட்டப்பிராயில் நேற்றுக் காலை இராணுவ ரோந்து அணிமீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 8.40 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவிலில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம்—

நாகர்கோவில் பகுதியில் நேற்று அதிகாலை படையினரும் - புலிகளும் கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை 5.15 மணி முதல் சுமார் அரை மணிநேரமாக இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

தமது நிலைகள் மீது புலிகள் 81 மில்லி மீற்றர் மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தியதாகவும், ஆயினும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தம் செல்லுபடியற்றதென கண்காணிப்புக்குழு அறிவிக்காது!

### பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு—

போர்நிறுத்தம் செல்லுபடியற்றதென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவிக்க முடியாது. அதை அரசும், புலிகளும்தான் அறிவிக்க முடியும் என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் எமர்சன் தெரிவித்தார்.

மாவிலாறு மோதல் தொடர்பாக பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு- கண்காணிப்பு நடவடிக்கையையே செய்து வருகிறது. அது அமைதியைக் காக்கும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

ஆகவே, இது போன்ற நடவடிக்கையில் ஒதுங்கியிருக்க கண்காணிப்புக் குழு விரும்புகிறது.எனினும் இரு (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாறை நெருங்கிவிட்டோம் இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு—

மாவிலாறு அணையைத் தாம் நெருங்கிவிட்டதாகவும் - கண்ணி வெடிகளால் படையினரின் முன்னேற்றம் தாமதமாகவுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

மாவிலாறில் நேற்று இடம்பெற்ற படைநடவடிக்கைகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் -

நேற்றுக்காலை 7.20 மணிக்கு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த படையினர் மாவிலாறு அணையை நெருங்கிவிட்டனர். இன்னமும் 500 மீற்றர் தூரமே முன்னேற வேண்டியுள்ளது. புலிகளின் மோட்டார் நிலைகள் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது.

மிக விரைவாக படையினர் அணைக்கட்டை கைப்பற்றி - (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடமைக்குத் திரும்பினார் இராணுவத் தளபதி

கொழும்பு—



தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத் தளபதி லெப்.கேணல் சரத் பொன்சேகா தனது கடமையை நேற்று மீண்டும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

மத அனுஷ்டானங்களின் பின்னர் நேற்று முற்பகல் 11 மணியளவில் இராணுவத் தலைமையகத்தில் இவர் தனது கடமையை ஆரம்பித்தார்.

கடந்த ஏப்பிரல் மாதம் 25 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலின்போது படுகாயமடைந்த இராணுவத் தளபதி தற்போது பூரண குணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளிடம் மேலும் இரு செஸ்னா விமானங்கள்

கொழும்பு—

விடுதலைப் புலிகளிடம் செஸ்னா ஸ்கை மாஸ்ரர் ரகத்தைச் சேர்ந்த மேலும் இரு இலகுரக விமானங்கள் இருப்பதாக இந்தியப் புலனாய்வுத்துறை இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கும் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

இந்த இரண்டு விமானங்களும் இரண்டு தடவை வானில் அவதானிக்கப்பட்டதுடன், ஒரு தடவை வவுனியா விமானப்படை தளத்தில் உள்ள ராடரில் பதிவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கைக்கு இனிங்ஸ் வெற்றி




கொழும்பு —

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே கொழும்பு எஸ்.எஸ்.சி விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில்- இலங்கை அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 153 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடி 169 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பந்துவீச்சில் முரளிதரன், டில்



ஹார பெர்னாண்டோ இருவரும் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி - ஜெயவர்த்தன, சங்ககார ஆகியோரின் இணைப்பாட்ட சாதனை மூலம் 5 விக்கெட் இழப்புக்கு 756 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை டிக்ளேர் செய்தது. இதில் ஜெயவர்த்தன 374 ஓட்டங்களையும், சங்ககார 287 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்க அணி கடுமையான அழுத்தத்துக்கு மத்தியில் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அந்த அணி விக்கெட் இழப்பின்றி 43 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆடுகளத்தில் நின்ற ரூடொல்ப் - ஹோல் ஜோடி நேற்றுமுன்தினம் ஆட்டத்தைத் தொடர்ந்தது. இவர்கள் இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

ஸ்கோர் 165 ஐ தொட்டபோது - 13 பவுண்டரிகள் அடங்கலாக 90 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரூடொல்ப் எதிர்பாராதவிதமாக பெர்னாண்டோவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அம்லா



வும் 2 ஓட்டங்களை மட்டும் பெற்று பெர்னாண்டோவின் பந்தில் பவிலியன் திரும்பினார்.

அவரையடுத்து அணித்தலைவர் பிறின்ஸ் களம் புகுந்தார். அந்த வேளை, 7 பவுண்டரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹோல், முரளியின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.


இந்த நிலையில் பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய டி-வில்லியர்ஸ் 24 ஓட்டங்களை மட்டும் பெற்று முரளியின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பௌச்சர், பிறின்ஸுடன் இணைந்துகொண்டார். இந்த ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தது. நேற்றைய ஆட்டநேரமுடிவில் தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் பிறின்ஸ் 60, பௌச்சர் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இறுதி நாளான நேற்று பிறின்ஸ் மேலதிகமாக ஒரேயொரு ஓட்டத்தை மட்டும் பெற்று 61 ஓட்டங்களுடன் முரளிதரனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களம் புகுந்த கிப்ஸ் 18 ஓட்



டங்களைப் பெற அவரையும் முரளிதரன் பவிலியனுக்கு அனுப்பினார்.

இந்தநிலையில் பௌச்சருடன் இணைந்துகொண்ட நிக்கி போஜே நிதானமாக ஆடினார். ஆனால், பௌச்சர் 10 பவுண்டரிகள் அடங்கலாக 85 ஓட்டங்களைப் பெற்று - ஜெயசூர்யவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய நெல் 0, ஸ்ரெய்ன் 4, என்ரினி 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க - ஒரு இனிங்ஸ் மற்றும் 153 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் முரளிதரன் 6, பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# குறுந்தூர ஓட்ட வீரர் கட்லினுக்கு ஆயுட்கால தடை விதிக்கப்படுமா?

பரிஸ் —

ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கியுள்ள ஒலிம்பிக் சம்பியன் ஜஸ்ரின் கட்லினுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மின்னல் வேக ஓட்டவீரரான ஜஸ்ரின் கட்லின் 100 மீற்றர் ஓட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். மேலும் உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் தங்கம் வென்று, நடப்பு சம்பியனாக வலம் வருகிறார். இந்த ஆண்டு கட்டாரில் நடைபெற்ற போட்டிகளில் 100 மீற்றர் தூரத்தை 9.77 வினாடிகளில் கடந்து, ஜமெய்க்காவின் அசாபா பவலுடன் உலக சாதனையை பகிர்ந்து கொண்டார்.

இவர் சமீபத்தில் அளித்த பேட்டியில் - கான்சாஸ் தடகள போட்டிகளின் போது ஊக்கமருந்து சோதனையில் சிக்கிக்கொண்டதாகத் தெரிவித்திருந்தார். இதற்கு முன்பு அவர் கடந்த 2001 இல் அமெரிக்க ஜூனியர் சம்பியன்ஷிப் போட்டிகளிலும் ஊக்க மருந்து எடுத்துக்கொண்டது தெரிய வந்தது. அவருக்கு கொடுக்கப்பட்ட மாத்திரைகளில் 'அம்படைமன்' கலந்திருந்தது. இது மருந்துப்பொருள் என்பதால் இரண்டாண்டு தடையிலிருந்து தப்பினார்.

தற்போது மீண்டும் ஒரு முறை அவர் 'டெஸ்டோஸ்டிரோன்' என்ற ஊக்கமருந்தை எடுத்துக்கொண்டது தெரியவந்துள்ளது.

சர்வதேச தடகள கூட்டமைப்பு விதிகளின்படி ஒரு வீரர் இருமுறை ஊக்கமருந்து உட்கொண்டது உறுதி செய்யப்பட்டால், அவருக்கு வாழ்நாள் தடை விதிக்கலாம். இது பற்றி சர்வதேச தடகள கூட்டமைப்பின் தலைவர் லெமன் டயாக் கூறுகையில் -

உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான கட்லின் இதுபோன்று சிக்கியுள்ளது மிகுந்த வருத்தமளிக்கிறது. போட்டிகளிலிருந்து ஊக்கமருந்தை முழுவதுமாக நீக்குவதே எங்களது நோக்கம்.

இந்த வழக்கில் அமெரிக்க ஊக்க மருந்து தடுப்பு அமைப்பின் முன்பு



கட்லின் ஆஜராக உள்ளார். இந்த விசாரணை விரைவில் தொடங் கும் என்றார்.

இதை கட்லினின் பயிற்சியாளர் றிவர் கிரகம் அடியோடு மறுத்துள்ளார். அவர் கூறுகையில் -

கட்லினின் புகழுக்கு களங்கம் விளைவிக்கவேண்டும் என சிலர் திட்டமிட்டு இதில் ஈடுபட்டுள்ளனர். அவர் குற்றமற்றவர் என்றார்.

சமீபத்தில் பிரான்ஸில் நடைபெற்ற 'ரூர் டி பிரான்ஸ்' சைக்கிள் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற பிளாய்ட் லாண்டிஸ் ஊக்கமருந்து பாவித்தமை தொடர்பான சர்ச்சை முடிவடையாத நிலையில், தற்போது கட்லினும் இது போன்று மாட்டிக் கொண்டுள்ளதால் அமெரிக்க விளையாட்டுத்துறை அதிகாரிகள் மிகுந்த வருத்தத்தில் ஆழ்ந்துள்ளனர்.

# இரண்டு விக்கெட்டுக்களால் சிம்பாப்வே அணிக்கு வெற்றி

ஹராரே —

சிம்பாப்வே-பங்களாதேஷ் அணிகளுக்கிடையே ஹராரேயில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் சிம்பாப்வே அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

நபீஸ் - ஹுசேன் இருவரும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். இதில் ஸ்கோர் 15 ஆக இருக்கும்போது நபீஸ் 8 ஓட்டங்களுடன் சிக்கும்புறாவின் பந்தில்ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஓமர் ஓட்டமெதையும் பெறாமல் சிக்கும்புறாவின் பந்தில் ஆட்டமிழந்தார.

அவரையடுத்து அப்ரப் அகமட் களம் புகுந்தார். அவர் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 25 ஓட்டங்களைப் பெற்று மசகட்சாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் ஹுசேனுடன், ஹபிபுல் பசார் இணைந்து கொண்டார். அவர் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 40 ஓட்டங்களைப் பெற்று சிக்கும்புறாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

ஓட்டச் சராசரி மிகவும் குறைவான நிலையில் களமிறங்கிய மொகமட் அஸ்ரபுல் 23 ஓட்டங்களைப் பெற்று மசகட்சாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் காலித் மசூத் களமிறங்க 7 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 78 ஓட்டங்களைப் பெற்ற ஹுசேன் முபாரிவாவின் பந்தில் போல்டானார்.

அடுத்து அலொக் கபாலி களத்தில் நுழைய காலித் மசூத் அதிரடியாக ஆடி 29 பந்துகளில் 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற்று சிக்கும்புறாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து மொகமட் ரபீக் களமிறங்கினார்.

50 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து 247 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு சிம்பாப்வே அணி களமிறங்கியது.

அந்த அணியின் ஸ்கோர் 7 ஆக இருக்கும்போது முதல் விக்கெட்டாக சிபாபா, மொட்ராசாவினால் வீழ்த்தப்பட்டார்.

அடுத்து றிங்கி களமிறங்கினார். அவரும் 10 ஓட்டங்களுடன் மொட்ராசாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் களமிறங்கிய மசகட்சா 7 ஓட்டங்களுடன் ஹுசே



னின் பந்தில் ஆட்டமிழக்க, அதே ஸ்கோரிலேயே தொடக்க வீரர் சிபண்டாவும் ஹுசேனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ரெய்லருடன், மட்சிகென்யோரி இணைந்தார். சற்று நேரத்தில் ரெய்லர் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சிக்கும்புறா களமிறங்கி அணியை ஸ்திரப்படுத்தினார்.

இந்த ஜோடி ஆறாவது விக்கெட்டுக்காக 114 ஓட்டங்களைச் சேர்த்தபோது - 7 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 89 ஓட்டங்களைப் பெற்றிருந்த மட்சிகென்யோரி, ஹுசேனின் பந்தில் பவிலியன் திரும்பினார்.

தொடர்ந்து களமிறங்கிய உட்செயா 8 ஓட்டங்களுடனும், ஹிக்கின்ஸ் ஓட்டமெதையும் பெறாமல் மொட்ராசாவின் பந்தில் ஆட்டமிழக்க, முபாரிவா களமிறங்கினார்.


49.1 ஓவர்களை எதிர்கொண்ட சிம்பாப்வே அணி 8 விக்கெட்டுக்களைக் கொடுத்து 248 ஓட்டங்களைப் பெற்றதனால், இந்தப் போட்டியில் 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் சிக்கும்புறா 6 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 70 ஓட்டங்களுடனும், முபாரிவா 1 ஓட்டத்துடனும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர். பந்துவீச்சில் மொட்ராசா 4, ஹுசேன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்

# விளையாட்டு

## முக்கோண ஒருநாள் தொடர்

# தென்னாபிரிக்க அணியின் கப்டனாக மார்க் பௌச்சர்!



கேப்ரவுண் —

தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளரான மார்க் பௌச்சர் கொழும்பில் இலங்கை, இந்திய அணிகளுடன் நடைபெறவுள்ள முக்கோண ஒருநாள் போட்டித் தொடருக்காக கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கப்டன் சிமித் காயமடைந்துள்ள நிலையில் - டெஸ்ட் தொடருக்காக பிறின்ஸ் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், பிறின்ஸ் சோபிக்காத நிலையில் - ஒருநாள் தொடருக்காக மார்க் பௌச்சர் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிமித்தை தவிர - கலிஸ், கெம்ப், லாங்வெல்ற் ஆகியோரும் காயமடைந்துள்ளனர்.

ஆனால் ஓவ்-ஸ்பின்னரான தண்டி சபலாலாவின் பெயர் 14 பேர் கொண்ட அணியில் சேர்க்கப்பட்டுள்ளது.

அணியின் பிரதம தேர்வாளர் கரூன் லோகற் தெரிவிக்கையில் -

பிறின்ஸ் நிச்சயமாக ஒருநாள் தொடரில் இடம்பெறமாட்டாரென்று தெரிகிறது. எனவே, நாங்கள் பௌச்சரை தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக்கொண்டோம் என்றார்.

இந்த முக்கோண ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்க - இலங்கை அணிகள் ஓகஸ்ட் 14 ஆம் திகதி மோதுகின்றன.

தென்னாபிரிக்க அணி விபரம் -

மார்க் பௌச்சர் (கப்டன்), போத்தா, டிப்பென்னர், பொஸ்மன், கிப்ஸ், டி-வில்லியர்ஸ், ஷோன் பொலக், வன்டர் வோத், றொபின் பீற்றர்சன், அன்ட்ரூ ஹோல், அன்ட்ரூ நெல், மக்காயா என்ரினி, அஸ்வெல் பிறின்ஸ், றோஜர் ரெலிமாக்கஸ், தண்டி சபாலாலா.

# ருவென்ரி-20 கிரிக்கெட்; ஐ.சி.சி. அங்கீகாரம்!

லண்டன் —

ருவென்ரி - 20 போட்டிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை முறைப்படி அங்கீகாரம் அளித்துள்ளது.

டெஸ்ட், ஒருநாள் போட்டிகள் மீதான ஆர்வம் குறைய, 20 ஓவர்கள் கொண்ட ருவென்ரி-20 போட்டியை இங்கிலாந்து அறிமுகப்படுத்தியது. இந்தவகை அதிரடி ஆட்டத்துக்கு உலகம் முழுவதும் அமோக ஆதரவு காணப்பட, இந்திய கிரிக்கெட் சபையும் வேறு வழியின்றி ருவென்ரி-20 போட்டியை ஏற்றுக்கொண்டது.

சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற கூட்டத்தில் ருவென்ரி-20 போட்டிக்கு அனுமதி அளிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. இது தொடர்பாக ஐ.சி.சி டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகள், உறுப்பு நாடுகளின் உறுப்பினர்கள் மற்றும் கிரிக்கெட் புள்ளிவிபர நிபுணர்கள், வரலாற்று ஆசிரியர்கள் சங்கத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

பின்னர் ருவென்ரி-20 போட்டியை கிரிக்கெட்டின் அதிகாரபூர்வ ஆட்டமாக அங்கீகரிக்க ஐ.சி.சி முடிவு செய்தது. இதைத்தவிர பல்வேறு முக்கிய அறிவிப்புகளும் வெளியாகின.


இதன்படி ஐ.சி.சி உறுப்பு நாடுகளில் இடம்பெற்றுள்ள சிறந்த 6 அணிகளுக்கு ஒருநாள் போட்டிக்கான அந்தஸ்து வழங்கப்படுகிறது. 3 நாட்களுக்கு குறைவாகவோ அல்லது அணிக்கு 11 பேருக்கு குறைவாக ஆடினால், அந்த போட்டிகளுக்கு முதல்தர அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது.

ஏ அணிகளுக்கிடையே நடைபெறும் 50 ஓவர்கள் போட்டிகளுக்கு அனுமதி தரப்பட்டது. இந்த போட்டிகளின் சாதனைகளை கிரிக்கெட் புள்ளிவிபர நிபுணர்கள், வரலாற்று ஆசிரியர் சங்கம் பதிவு செய்யும். இது குறித்து ஐ.சி.சி பொது தலைவர் டேவிட் றிச்சர்சன் கூறுகையில் -

அதிகாரபூர்வ அந்தஸ்துபெற்ற போட்டிகளை பல்வேறு வகையாக பிரிப்பது மிகவும் அவசியம். இதனால் கிரிக்கெட் புள்ளிவிபரங்களை தொகுப்பவர்கள் பெரிதும் பயனடைவர் என்றார்.

# அரசின் மெதுவான நடவடிக்கையே மாவிலாறு மீட்கப்படாததற்கு காரணம்

## ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு



கொழும்பு—

அரசாங்கத்தின் மெதுவான நடவடிக்கை காரணமாகவே இதுவரை மாவிலாறு அணையை மீட்கமுடியாதுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

மாவிலாறு அணை மூடப்பட்டு பத்து நாட்கள் கடந்துள்ளன. பிரதேசத்தில் உள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றும் எண்ணத்தில் விடுதலைப் புலிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்தார்.

அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால் 70 ஆயிரம் குடும்பங்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.'

மாவிலாறு அணையை திறக்காமல் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் திருகோணமலையில் இருந்து வெளியேறமாட்டார் என ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதய கமன்பில தெரிவித்தார்.

இதேவேளை, அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் லாபம் பெறும் நோக்கில் ஈடுபட்டுள்ளதாக அணையை திறப்பதற்காக முதலில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த சேருநுவர மங்கள ரஜமஹா விகாராதிபதி சேருவில சரணகீர்த்தி தேரர் தெரிவித்தார்.

மாவிலாறு நோக்கிச் செல்லும் நடவடிக்கை தேவையற்ற ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டார்.

# போலி அடையாள அட்டைகளை கண்டுபிடிப்பதற்கான கருவிகள்!



கொழும்பு—


போலி அடையாள அட்டைகளைக் கண்டுபிடிப்பதற்கு இன்பராரெட் மின் விளக்குகள் - அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரி வித்தார்.

இந்த உபகரணத்தின் மூலம் விடுதலைப் புலிகளால் சிங்களப் பெயர்களைப் பயன்படுத்தி போலியாக தயாரிக்கப்பட்ட அடையாள அட்டைகளை இனங்காண முடியும். எதிர்காலத்தில் இந்த உபகரணங்களை வீதிச்சோதனைச் சாவடிகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது இடம்பெற்றுவரும் கதிர்காம மற்றும் கண்டிப் பெரகரா உற்சவத்துக்கு வரும் பக்தர்களது அடையாள அட்டைகளையும் சோதனையிடுவதற்கும் இவை பயன்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# கண்காணிப்புக்குழு வெளியேற்றம்; அரசாங்கம் கவலையடையவில்லை!

## என்கிறார் கெகலிய ரம்புக்வெல



கொழும்பு—

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வெளியேறுவது குறித்து அரசாங்கம் கவலையடையவில்லை.

கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள் விலகினால் அதற்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளது என திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சரும் அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளருமான கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் வெளியேறுவதாக அறிவித்துள்ளனர். இந்த விடயத்தை நாங்கள் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

இதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து பின்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் விலகுவதையடுத்து கண்காணிப்புக் குழுவில் எற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப தெற்காசிய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்களை அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் 58 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 22 பேர் டென்மார்க் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இந்த நாடுகளின் விலகல் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் பேச்சு நடத்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கு அடிபணியாமல் செயற்படுமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் அரசு கோரிக்கைவிடுப்பதாகவும் இது தொடர்பாக தூதரக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# புத்தளம் ஐ.தே.க. எம்.பியும் ஆளும் கட்சிக்குத் தாவல்!

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நியோமல் பெரேரா ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தாவவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

மகிந்த அரசுடன் இணைந்து கொள்ளும் ஐந்தாவது ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் இவராவார். இவருக்கு பிரதியமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, அடுத்த சில தினங்களில் ஆறு அல்லது ஏழு ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணையவுள்ளதாக ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## குண்டுத் தாக்குதல்கள் மூலம்

# மாவிலாறு பிரச்சினையை தீர்க்க முடியாது என்கிறது ஐ.தே.கட்சி!

கொழும்பு—

மாவிலாறு அணைக்கட்டு விவகாரத்துக்கு குண்டுத் தாக்குதல் மூலம் தீர்வு காணமுடியாதெனவும், எனவே இரண்டு தரப்பினரும் விட்டுக்கொடுத்து செயற்படுமாறும் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஐ.தே.க அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக செயற்படவேண்டும். விடுதலைப் புலிகளால் தண்ணீர் வழங்குவது தடைப்பட்டுள்ளமையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சேருவில் மக்களுக்கு தண்ணீர் வழங்குவதை தடுப்பதன் மூலம் மூதூர், ஈச்சிலம்பற்று மக்களுக்கான தண்ணீர், உணவு மற்றும் விவசாய பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது.

மாவிலாறு அணைக்காக படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் மேற்கொள்கின்ற தாக்குதலின் இறுதி பெறுபேறு அணைக்கட்டு சேதமுறுவதாகவே அமையும். எனவே, தாக்குதல்களைக் கைவிட்டு போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக இரண்டு தரப்பினரும் செய்படவேண்டும்.

இரண்டு தரப்பினரும் மேற்கொள்ளும் தாக்குதல் சம்பவங்களால் போர்நிறுத்த உடன்படிக்கைக்குப் பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளதுடன் - தற்போதைய நிலை தொடருமாயின் நாட்டில் மீண்டுமொரு யுத்தம் வெடிப்பதை தவிர்க்கமுடியாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகள் விமான ஓடுதளத்தை நிர்மாணிக்க விடமாட்டோம்!

## விமானப்படை பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு—

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்டு வரும் விமான ஓடுதளத்தை முழுமையாக நிர்மாணிக்க அனுமதிக்கமாட்டோம். அதனை தாக்கியழிக்கவே விமானக் குண்டு வீச்சு நடத்தப்படுவதாக விமானப்படையின் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது -

திருகோணமலையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி மீது புலிகள் நான்கு தடவைகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர். அதில் மூன்று தாக்குதல்கள் கிராமங்கள், பாடசாலையை நோக்கி நடத்தப்பட்டன. மற்றைய தாக்குதல் கல்லாறு முகாமுக்கு அருகில் நடத்தப்பட்டது.

எனினும் சேதங்கள் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# எண்ணெய் அகழ்வு பணிக்கு சீன அரசுக்கு அனுமதியளிப்பு

கொழும்பு—

மன்னாரில் எண்ணெய் அகழ்வு மற்றும் பாலம் அமைத்தல் செயற்பாடுகளுக்கு சீனா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் சீனாவுக்கு சென்ற வேளை மன்னாரில் எண்ணெய் அகழாய்வுப் பணிக்கு ஒப்பந்தமொன்றைச் செய்திருந்தார்.

இதேபோன்று பிரதான நிலப்பரப்பிலிருந்து மன்னார் தீவை இணைக்கக்கூடிய பாலத்தை சீரமைப்பதற்கு ஜப்பானுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

ஜப்பானின் சர்வதேச கூட்டுறவுச் சபையினூடாக இந்தப் பணிகளை ஜப்பான் அரசாங்கம் தொடங்க முடிவு செய்துள்ளது. எதிர்வரும் செப்ரம்பர் மாதம் இந்தப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

# ஊழியர் வேலைநிறுத்தம் செய்தால் எரிபொருள் வழங்க மாற்று ஏற்பாடு

கொழும்பு—

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் - படையினரைப் பயன்படுத்தி எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

தற்போது கொலன்னாவ பெற்றோலியக் கூட்டுத்தாபன சூழலில் இராணுவம் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் - தற்போது பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தைப் பயன்படுத்தி முதலில் எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர்களினதும் உதவியைப் பெற்று எண்ணெய் விநியோகத்தை வழமைபோன்று நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எண்ணெய்க் கூட்டுத்தாபன வளவிலிருந்து வெளியேறும் எண்ணெய் பௌசர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீண்டும் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அதற்கு எதிராக அரசு மாற்று நடவடிக்கை எடுக்குமென எரிபொருள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

# இளைஞர் கடத்தல்

ஏறாவூர்—

மட்டக்களப்பு - ஏறாவூரில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோரால் இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டார்.

ஏறாவூர் - சவுக்கடியில் சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தி (வயது 28) என்ற இளைஞரே நேற்றுமுன்தினம் மாலை 6.20 மணியளவில் மைதானத்தில் உதைபந்தாட்டம் ஆடிவிட்டு திரும்பிய போது கடத்திச் செல்லப்பட்டவராவார்.

# விமானத் தாக்குதல்கள் யுத்த நடவடிக்கையல்ல

## என்கிறது அரசாங்கம்

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது நடத்தி வரும் விமானத் தாக்குதல்களானது ஒரு யுத்தத்துக்கு திரும்பும் நடவடிக்கை அல்ல என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மாவிலாறு அணைக்கட்டு வழிமறித்தலை முறியடிக்கும் நோக்கத்துடனேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நீர் விநியோகத்துக்காகவே இந்த மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ்மா அதிபராக மூவரிடையே போட்டி!

கொழும்பு—

அடுத்த 2 மாதங்களில் வெற்றிடமாகவுள்ள பொலிஸ்மா அதிபர் பதவிக்கு பொலிஸ் திணைக்களத்திலுள்ள மூன்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களிடையே பலத்த போட்டி நிலவுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான போதி லியனகே, சிறிசேன ஹேரத், விக்டர் பெரேரா ஆகியோர் மத்தியிலேயே இந்தப் போட்டி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஜனாதிபதி மகிந்த தவறிவிட்டார்

## தீவக மக்கள் நலன் காப்பகம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் —

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தவறிவிட்டார். தமிழ் மக்களின் அனைத்து எதிர்பார்ப்புகளும் தவிடுபொடியாகி விட்டன. மீண்டும் எந்த நேரத்திலும் போர் வெடிக்கலாம் என்ற அச்ச உணர்வுடனேயே மக்கள் தமது காலத்தைக் கழிக்கின்றனர்.

நாட்டிலுள்ள தமிழர்கள் முற்றாக அழிக்கப்படவேண்டும் என்று கங்கணம் கட்டும் சிங்களப் பேரினவாதிகளுடன் இணைந்தே ஜனாதிபதி இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என தீவக மக்கள் நலன் காப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாகப் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றையும் அது வெளியிட்டுள் ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது -

இன அழிப்பின் நடவடிக்கையாகவே யாழ். மாவட்டத்தில் நாள்தோறும் கிரா மங்களில் திடீர் திடீரெனச் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள், கைதுகள், கொலைகள் என இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த சில மாதங்களில் 318 பேர் கைது செய்யப்பட்டு காணாமற்போயுள்ளனர். நூற்றுக் கணக்கானோர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் எமது மக் கள் நிம்மதிகெட்டு, அச்சத்துடனும், பீதியுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

சர்வதேச சமூகமும் இவ்வாறான மனித உரிமை மீறல்களை வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்க சர்வதேச சமூகம் எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதனால் இராணுவம் எந்தவித தயக்கமுமின்றித் தனது அடாவடித்தனத்தை மேற் கொள்கிறது.

ஜெனிவா இணக்கப்பாட்டை அரசு செவ்வனே கடைப்பிடித்திருக்குமேயா னால் பாரிய உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம். அதனை விரும்பாத அரசு - தமிழர் தாயகப்பகுதிகள் மீது தனது போர் வெறியை ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பு - கரடியனாறில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகம் மீதும், வாகனேரியில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீதும், திருமலையில் பாடசாலை மீதும் என முப்படைகளும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளன.

இதில் பல போராளிகளும் உயிரிழந்துள்ளனர். இது ஓர் அப்பட்டமான போர்நிறுத்த மீறலாகும். இதனை எமது தீவக மக்கள் நலன் காப்பகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இதேவேளை - தமது இருப்பைத் தாமே உறுதிசெய்து, தமது சுதந்திரமான வாழ்வைக் காப்பதற்காகவே தமிழ்மக் கள் ஆயுதம் ஏந்தினர். எமது மக்களை சிங்கள இராணுவம் சீண்டுமானால் அவர்கள் எமது மண்ணிலிருந்து வெளியேற்றப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடவுச்சீட்டு விண்ணப்பத்தை தபாலகங்களில் பெறலாம்!

யாழ்ப்பாணம்

கடவுச்சீட்டு பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தமது பிரதேச செயலகங்களினூடாக விண்ணப்பங்களை அனுப்பி கடவுச்சீட்டுக் களைப் பெற்றுக்கொள்ளும் நடை முறையை அரசு மேலும் இலகுபடுத்தும் முகமாக விண்ணப் படிவங்களை தபால் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

எனினும், இந்தத் தகவல் மக்களுக்குச் சரியானமுறையில் சென்றடையாத நிலையில் பலரும் கடைகளில் பணம் கொடுத்து விண்ணப்பப்படிவங்களை பெறுவதாக பிரதம தபால் அதிபர் குமரகுரு கவலை தெரிவித்தார்.

எனவே, கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது தேசிய அடையாள அட்டையுடன் வந்து விண்ணப்பங்களை தபாலகங்களில் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

சமாதான நீதவான்களின் உறுதிப்படுத்தும் செயற்பாடு போன்று தனிப்பட்ட ரீதியில் அறிமுகமானவர்களை உறுதிப்படுத்தும் அதிகாரம் தமக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், புதிதாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவம், மாற்றங்களை மேற்கொள்ளும் விண்ணப்பப்படிவம் மற்றும் பிள்ளைகளை இணைக்கும் விண்ணப்பப்படிவம் என்பன இலவசமாகவே வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# குடாநாட்டை மீட்க புலிகள் எந்த நேரமும் தாக்கலாம்

## கொழும்பு பத்திரிகை தெரிவிப்பு

கொழும்பு —

திருகோணமலையில் படையினர் மேற் கொண்டு வரும் தாக்குதல்கள் மற்றும் மட்டக்களப்பில் தேனகம் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் என்பவற்றை அடுத்து விடுதலைப் புலிகள் எந்த நேரமும் யாழ். குடாநாட்டை கைப்பற்றும் தாக்குதலைத் தொடுக்கலாம் என படை அதி காரிகளை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

படையினரின் தாக்குதல்களில் இதுவரை 16 விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்த நிலையில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் மிகவும் மோசமாக இருக்கும் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவச் சீருடை கொண்டுவந்த இரண்டு பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு —

இராணுவ மற்றும் ஊர்காவல் படையினருக்கான பெருமளவு சீருடைத் துணிகள் கண்டம்பே சோதனைச்சாவடியில் வைத்து பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைப்பற்றப்பட்டன.

47 சுருள்களைக் கொண்ட ஒரு தொகை சீருடைத் துணி கொழும்பு முகத்துவாரத்தில் இருந்து லொறி ஒன்றில் கொண்டுசெல்லப்பட்டபோதே குறித்த சோதனைச்சாடியில் வைத்து கைப்பற்றப்பட்டதுடன், அதனைக் கொண்டு சென்ற இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சீருடைத் துணிகளை கொழும்பு முகத்துவாரத்திலிருந்து பிபில காட்டுப் பகுதிக்குக் கொண்டுசென்றதாக கைதுசெய்யப்பட்ட இருவரும் தெரிவித்தனர். எனினும், துணியின் உரிமையாளர் குறித்தோ, சீருடைத் துணிகள் யாருக்கு கொண்டு செல்லப்படுகின்றன என்பது குறித்தோ அவர்கள் எதையும் தெரிவிக்கவில்லை.

சீருடைத் துணிகளை கண்டிக்கு கொண்டு சென்ற பின்னர் அவற்றை பிபில பிரதேசத்தின் எந்த இடத்துக்குக் கொண்டுசெல்வதென துணியின் உரிமையாளர் தொலைபேசி ஊடாகவே தெரியப்படுத்துவார் என அவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் துணிகள் பிபில காட்டுப் பகுதி ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குக் கொண்டுசெல்லத் திட்டமிடப்பட்டிருந்ததா என்பது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தே)

# 1500 பேர் இடப்பெயர்வு!

திருகோணமலை —

திருமலையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் படையினரின் வான்வெளித் தாக்குதல்கள் மற்றும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக சுமார் ஆயிரத்து 500 பொதுமக்கள் குடியிருப்புக்களை விட்டு இதுவரை இடம்பெயர்ந்துள்ளனர்.

வெருகல், கதிரவெளி, ஈச்சிலம்பற்று ஆகிய பகுதிகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாக திருமலைச் செய்திகள் தெரிவித்தன.

# யுத்த நிறுத்தத்தை மதித்து நடக்குமாறு நோர்வே கோரிக்கை

கொழும்பு —

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை இரு தரப்பும் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டுமென விடுதலைப் புலிகளிடமும் அரசாங்கத்திடமும் நோர்வே கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் தொடருமானால் சமாதான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்படும்.

எனவே, இரு தரப்பினரும் தாக்குதல்களை நிறுத்தவேண்டும். போர்நிறுத்த ஒப்பந்த மீறல்களை நோர்வே என்றுமே ஏற்றுக்கொள்ளாது என நோர்வே தூதரகத்தின் பதில் பேச்சாளர் டொம் கப்ஸ்கொக் தெரிவித்தார்.

பெரும் போர் மூளும் சூழல் ஏற்பட்டுள்ள நிலையிலேயே நோர்வேயின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளுக்கு தகவல் வழங்கிய இரு இராணுவத்தினர் கைது!

கொழும்பு —

இராணுவத்திலிருந்து புலிகளுக்கு இரகசியத் தகவல்கள் வழங்கிய இருவரும், அவர்களை இராணுவத்தில் இணைப்பதற்கு உதவிய தந்திரே என்பவரும் நேற்றுமுன்தினம் திருகோணமலை - கோமரங்கடவெவவில் கைதுசெய்யப்பட்டனர்.

இராணுவ சிப்பாய்களாகப் பணியாற்றிய இந்த இருவரும் நீண்டகாலமாக விடுதலைப் புலிகளுக்குத் தகவல்களை வழங்கிவந்தனர் என படைத்தரப்புத் தெரிவித்தது.

தந்திரே என்பவரின் வயற்காணி திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருப்பதாகவும், தனது வயற்காணியைப் பாதுகாப்பதற்காக விடுதலைப் புலிகளின் உளவாளிகள் இருவரையும் இராணுவத்தில் இணைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் அவர் இராணுவத்திடம் தெரிவித்துள்ளார் என படைத்தரப்பு மேலும் தெரிவித்தது. (தே)

# 2 ஆயிரம் ரூபா தாள்கள் விரைவில் வெளிவரும்!

கொழும்பு —

இலங்கை மத்திய வங்கியால் அச்சிடப்பட்டுள்ள 2000 ரூபா தாள் - மத்திய வங்கியின் நிதிச்சபை தீர்மானத்துக்கமைய உரியநேரத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுமென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் கப்ரால் தெரிவித்தார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலம் வெளியான தகவலுக்கமைய உயர் பெறுமதியான பண நோட்டுக்களை வெளியிடுவது அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டது.

நாடு பொருளாதார அபிவிருத்தி அடையும்போது உயர் பெறுமதியான தாள்களை அச்சிடுவது அவசியமானதெனவும் - பொருளாதார கொடுக்கல் வாங்கல்கள் இதன்மூலம் இலகுவாகும் எனவும் - 2000 ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுடைய தாள்களை வெளியிடுவது தொடர்பாக மத்திய வங்கி தீர்மானம் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (தே)

## 29.07.2006 ஆம் திகதிய புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் விடைகள்

### வினாத்தாள் I

(1) 2 (2) 4 (3) 2 (4) 4 (5) 1 (6) 1 (7) 2 (8) திராட்சை, மா (9) கோப்பி, தென்னை (10) ஏலக்காய், கராம்பு (11) றோசா, அந்தூரியம் (12) கோவா, கறி மிளகாய் (13) சரி (14) சரி (15) பிழை (16) சரி (17) சரி (18) சரி (19) சரி (20) பிழை(21) பூக்கள் (22) பச்சை (23) கிரேக்கம் (24) இறுக்கமாக (25) சருகுமான் (26) அரச (27) உலர்த்தி (28) 9810(29) ரூப்ன்(30) 50,40 (31) 6 (32) வயிறு/ உதரம்(33) துணி தூக்கி (34) சத்திய சோதனை(35) சுத்தவாளி (36) நட்சத்திரங்கள் (37) காயவைத்தல் (38) மேல் மாகாணத்தில் (39) துளைக்கருவி (40) சம்பவத் திரட்டுப் புத்தகம்

### வினாத்தாள் II

(1) மரம் ஒன்றை நாட்டுவதால் (2) நாடு அழகு, மண் வளமுறும், நிழல் குளிர்மை. (3) சக்தி, உடல் வளர்ச்சி, நோய் பாதுகாப்பு (4) காபனீரொட்சைட்டை வெளிவிடுவதால் (5) சூரிய ஒளி, காற்று , நீர் (6) இனிய (7) நீர் / நீங்கள் (8) (1) குளிர் (2) இலட்சணம் (9) 1) fruits 2) Tree (10) அழகு கெடும், மழைவீழ்ச்சி குன்றும், மிருகங்களின் புகலிடம் அழியும் (02) 1) 44 2) 4 ஆம் நாளில் 3) 16 வித்துக்கள் 4) 15 5) 19(03) 1) 2 2) 3 3) 2 4) 3 5)36 6) 1 7) 2 8) 3 9) 1 10) 5 (04) 1) காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர்.2) அந்தச் செல்வந்தர் பல ஏக்கர் வயல் களுக்கும், தென்னந்தோட்டங்களுக்கும் உரிமையாளராக விளங்கினார்.(05) 1) 2400 ml /2.4 l /2 l 400 ml 2) 5 மணி 45 நிமிடம் / 5- 3/4 மணி 3) 4 4) ரூபா 197.16 5) சுரேஷ் 6) ரூபா 50 7) 28 Cm 8)6 மடங்கு 9) 12 முக்கோணம் 10) 6, 4, 2 (06) 1)சரி 2) சரி 3) பிழை 4) சரி .

# பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிய சிறைக் கைதிகள் மடக்கிப் பிடிப்பு!

கீரனூர் —

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு – விசாரணையின் பின் புதுக்கோட்டை நீதிமன்றிலிருந்து திருச்சி சிறைச்சாலைக்குப் பொலிஸாரால் பஸ்ஸில் அழைத்து வரப்பட்டபோது இனந்தெரியாத குழுவொன்றால் கடத்திச் செல்லப்பட்ட இலங்கை கைதிகளான இம்தியாஸ், செல்வகுமார் ஆகியோரையும் அவர்களை இலங்கைக்கு அழைத்துச் செல்லவிருந்த தூத்துக்குடியைச் சேர்ந்த சசிகுமார் என்பவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

இவர்களை விசாரணை செய்ததில் பல தகவல்கள் வெளிவந்துள்ளன.

இம்தியாஸுக்கு இரு மனைவிகள் உள்ளனர். ஒரு மனைவி சென்னையிலும், மற்றொரு மனைவி இலங்கையிலும் வாழ்ந்து வருகின்றனர். மேலும் பல கோடி ரூபா பணம் இம்தியாஸிடம் உள்ளது. அவர் வெளியேவர ரூ.30 லட்சம் வரை பேரம் பேசப்பட்டுள்ளது.

அதேவேளை - தற்போது திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் கடை ஒன்றை நடத்தி வரும் செல்வகுமாரின் சகோதரரான ரமேஷ் - தனது அண்ணனைக் காப்பாற்ற ஆத்மநாபன், சத்தியமூர்த்தி ஆகியோரிடம் ஒரு லட்சம் ரூபா கொடுத்துள்ளார்.

இவர்கள் கீரனூர் அருகே பஸ்ஸில் வைத்து பொலிஸாரைத் தாக்கிவிட்டு கைதிகளைக் காரில் கடத்திச் சென்று - நவல்பட்டு அருகேயுள்ள துப்பாக்கித் தொழிற்சாலை அருகே இறக்கிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர். தப்பிய கைதிகள் இருவரும் பட்டுக்கோட்டையில் உள்ள ரமேஷ் வீட்டுக்குச் சென்றனர்.

அங்கு ரமேஷ் இல்லாததால் பஸ்ஸில் திருச்செந்தூருக்குச் சென்ற கைதிகளில் செல்வகுமார் மொட்டை போட்டுள்ளார்.

பின்னர் அங்கிருந்து தூத்துக்குடிக்குச் சென்று சசிகுமார் வீட்டில் பதுங்கியிருந்தனர். தாம் பதுங்கியிருப்பதை பொலிஸார் தெரிந்துவிட்டதை அறிந்த 3 பேரும் ஓட்டோ ஒன்றில் தப்பிச் செல்ல முயன்றபோது பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.


கைது செய்யப்பட்ட 3 பேரும் கீரனூர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிபதி இந்திராணி , அவர்களை 15 நாட்கள் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.


இதைத் தொடர்ந்து அவர்கள் திருச்சி சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களைத் தேடிவந்த கீரனூர் பொலிஸார் - ஆத்மநாபன், சத்தியமூர்த்தி ஆகியோரைக் கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து ஒரு லட்சம் ரூபா பணத்தையும் பறிமுதல் செய்தனர். மேலும் இந்த வழக்கில் தொடர்புடையவர்களைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2006


ஆசிரியர் :- த.அம்பிகைபாகன்




* பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.

1)



1. கடற்கரை,இருவித்திலை,வளரும்
2. கடற்கரை, ஒருவித்திலை, தாகம்
3. கடற்கரை, ஆணிவேர், பழம்



2)
1. பழம், நாருவேர், இருவாட்டிமண்
2. பழம், ஆணிவேர், மணல்மண்
3. பழம், ஆணிவேர், நன்மண்

* பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்ட அறிவித்தல்களுக்கு ஏற்ப விடை தருக.

3)
வண்ணம் பல கொண்டது
கண்களைத்தான் பறிக்குது
வாசனை வீசியே
வண்டினைத்தான் அழைக்குது

இந்தப் பாடல் உணர்வு பற்றியது என்றில் கண்களை என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. பூக்கள் பற்றியது என்றால் வாசம் என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுங்கள்.

* பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

4) ரகு, ரவி, சதீஸ்,கமல் என்ற நால்வரும் ஓட்டப்போட்டியில் கமல் சதீசைவிட வேகமாக ஓடியபோது ரகு பின்னாலேயே ஓடினான் எனில், ரகுவால் ரவியை விட வேகமாக ஓட முடியவில்லை. பிள்ளைகள் எவ்வாறு பந்தயத்தை ஓடி முடித்தனர் என்ற ஒழுங்கு முறையைக் காட்டும் நிரலைத் தெரிவு செய்க.

| 1. | 2. | 3. |
|---|---|---|
| கமல் | ரவி | சதீஸ் |
| சதீஸ் | ரகு | ரகு |
| ரவி | கமல் | கமல் |
| ரகு | சதீஸ் | ரவி |

* ஒரு விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய 5 அஞ்சலோட்டக் குழுக்கள் பெற்ற புள்ளிகள் வருமாறு

குழு A - 14 E - 17 B - 16 F - 6 C - 8

5) புள்ளிகளின் அடிப்படையில் குழுக்களை ஏறுவரிசைப்படுத்தி சரியான விடையின் கீழ் கோடிடுக.
1. ACFBE 2. FCABE 3. EABCF

6) கூடியபுள்ளிகளைப் பெற்ற குழுவிற்கும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற குழுவிற்கும் இடையேயுள்ள வித்தியாசம் எவ்வளவு?
1. 11 2. 17 3. 14 4. 8

7) ஓர் அஞ்சலோட்டக் குழுவில் பங்குபற்றும் வீரர்கள் எத்தனை பேர்?
1. 5 2. 4 3. 2 4. 6

8) மாலா தனது வீட்டில் இருந்து வடக்குத் திசையாக 100 மீற்றர் நடந்து பின்னர் மேற்குத்திசையாக 100 மீற்றர் நடந்து சென்று அங்கிருந்து வீட்டைப் பார்க்கிறாள். வீடு எந்தத் திசையில் தெரியும்.
1. நிருத்தி மூலை 2. அக்கினி மூலை
3. வாயு மூலை 4. ஈசான மூலை

9) மாலாவிடம் பத்துப் பத்து ரூபாய்கள் உள்ளன. அவள் ரூ 15.00 விலையுள்ள பேனா ஒன்று வாங்கினாள். அவளிடம் உள்ள மீதிப்பணம் எவ்வளவு?
1. 67.00 2. 24.00 3. 76.00 4. 85.00

10) ஒரு வட்டத்துக்குள் எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உண்டு?
1. 4 2. 6 3. பல 4. 8

* பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

11) மகிந்தன் 5ஆம் தரத்தில் கல்விகற்கும் மாணவன் அவனுக்கு அப்பா
1. காணாமல் போய்விட்டார் 2. இறந்துவிட்டார் 3. இல்லை


12) அவனுடைய அம்மா மிகவும்
1. ஆதரவாக 2. மகிழ்ச்சியாக 3. கஷ்ரப்பட்டு

13) படிப்பித்தார். மகிந்தன் அம்மாவின்
1. விருப்பு இன்றி 2. விருப்பப்படி 3. விருப்போடு

14) நன்றாகப் படித்தான். தன் மகன் ஒரு
1. வைத்தியராக 2. பொறியியலாளராக 3. சாரதியாக

15) வந்து நாட்டிற்கு சேவை செய்ய வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் இறைவனிடம்
1. அழைத்தார் 2.பிரார்த்தித்தார் 3. கட்டளையிட்டார்

* கீழே உள்ள உபகரணங்களின் பயன்பாடுகளைக் குறிக்கும் வசனங்களுக்கு நேரே உரிய எழுத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.



A B C D E

16) திரவங்களின் கனவளவை அளக்கப் பயன்படும் கருவி எது?
..............................................................

17) மின்சூழ் ஒளிர்வதற்குப் பயன்படுத்துவது எது?
..............................................................

18) உடல் வெப்ப நிலையை அளக்க பயன்படுத்தும் கருவி எது?
..............................................................

19) கிணற்றில் இருந்து நீரை எடுப்பதற்குப் பயன்படும் சாதனம் எது?
..............................................................

20) வீட்டில் ஒளியைப் பெறுவதற்குப் பொருத்தப்படும் சாதனம் எது?
..............................................................

* கீழே தரப்பட்ட கூற்றை வாசித்து அதன் கருத்தை தெளிவுபடுத்தும் வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.

21) இறக்கப் போனாலும் சிறக்கப்போ
1. இறக்கும்போது சிறப்பாய் இருக்கவேண்டும்
2. வறுமையிலும் செம்மையாக வாழ்
3. மனத்திருத்தி தான் சிறந்தது

22) தாலாட்டுப்பாடல் உருவாகக் காரணம்?
1. குழந்தைகள் அப்பாடலைக் கேட்டவுடன் தூங்குகிறது
2. மற்றைய பாடல்களைவிடத் தாலாட்டுப் பாடல்களைப் பாடுவது இலகுவாகும்
3. பெற்றோருக்கு அப்பாடலில் அதிக விருப்பம்

23) ஒருவரது நடத்தையைக் கொண்டு அவர் நல்லவரா,கெட்டவரா என்பதை தீர்மானிக்க முடியும்
1. நிழலின் அருமை வெயிலிற் தெரியும்
2. தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்
3. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

24) தாய் தன் மகனைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள்
1. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா
2. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு
3. மனமுண்டானால் இடமுண்டு

25) மாலை நேரத்தில் மலர்ந்த தாமரைப் பூக்களால் நிரம்பியிருந்த குளம் அழகாகக் காட்சியளித்தது.
1.குளங்களில் தாமரைப் பூக்களைக் காணமுடியாது.
2. மாலைநேரத்தில் தாமரைப் பூக்கள் மரை மாட்டாது
3. தாமரைப் பூக்களால் குளம் அழகு பெறமாட்டாது

* கீழ் காணப்படும் உருக்களில் வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.

26) 
i ii iii iv

27) 
i ii iii iv

28) 
i ii iii iv

29) 
i ii iii iv

30) 
i ii iii iv

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2006

ஆசிரியர் :- த.அம்பிகைபாகன்




**✻ 1) பின்வரும் விளம்பரத்தை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

- ♦ உங்கள் பிள்ளைகள் பாடசாலை செல்லுகிறார்களா?
- ♦ பாடசாலைச் சீருடைகள் தூய்மையாக இருக்கவேண்டும் அல்லவா?
- ♦ உங்கள் கணவர் அலுவலகம் செல்லுகிறாரா?
- ♦ ஆடைகள் அம்சமாக இருக்கவேண்டும் அல்லவா? ஆம் தூய்மையோ வெண்மைக்கு உதவும் சன்லைட் சவர்க்காரம் துணிகளை பளிச்சிடும் வெண்மையாக்குவது சன்லைட் சவர்க்காரம் இதன் சில்லறை விலை ரூ 22.00 மட்டுமே செலவு மிச்சம். விலையோ குறைவு.
  தரமோ அதிகம். ஆடைகளின் பாதுகாவலர் சன்லைட் சவர்க்காரமே!
- ♦ இதன் ஏக விநியோகஸ்தர் - எஸ்.வீ.எம் அன்சன்ஸ்.
  இல - 16, டாம்வீதி, கொழும்பு - 13. தொ.பே.இல - 011-2516415

1) தூய்மை என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல் தருக?
..................................................

2) கணவன் என்பதற்கு எதிர்ப்பாற் சொல் தருக?
..................................................

3) சன்லைற் சவர்க்காரம் ஒன்றின் விலை யாது?
..................................................

4) ஏக விநியோகஸ்தரின் தொலைபேசி இலக்கம் யாது? ..............................

5) ஏக விநியோகஸ்தரின் முகவரி யாது?..............................

6) இவ் விளம்பரமொன்றின் நிறுத்தற் குறி ஒன்றினை எழுதுக?
..................................................


7) வெண்மை என்பதற்கு எதிர்கருத்துள்ள சொல் தருக?
..................................................

8) வெண்மையாக்குவது என்பதைப் பிரித்து எழுதுக?
..................................................

9) செல்கின்றார் என்பது எக்காலத்தை உணர்த்துகிறது?..............................

10) ஆடைகளின் பாதுகாவலர் எது? ..............................

**✻ 2) ஒரு மாம்பழக் கடை ஒன்றில் கிழமை நாட்களில் விற்பனை செய்யப் பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதைப் பார்த்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




⬮ - என்பது - 20 மாம்பழங்களைக் குறிக்கிறது.

1) ஐந்து நாட்களும் விற்ற மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..................................................

2) ஒரு மாம்பழத்தின் விலை 20.00 எனில் புதன்கிழமை மாம்பழங்களை விற்றுப் பெற்ற பணம் எவ்வளவு?
..................................................

3) ஒரு மாம்பழத்தை விற்பதால் ரூபா 2.00 இலாபம் கிடைத்தால் வியாழக் கிழமை கிடைத்த இலாபம் எவ்வளவு? ..............................

4) அதிகமான மாம்பழங்கள் விற்பனையான நாள் எது?எத்தனை மாம்பழங்கள் விற்பனையாகின? ..............................

5) குறைந்தளவு மாம்பழங்கள் விற்பனையான நாள் எது? எத்தனை மாம்பழங் கள் விற்பனையாகின?..............................

**✻ 3) பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1) தாவரங்கள் வளர நீர் அவசியமில்லை. (...............)
2) பனை,தென்னை என்பன ஒருவித்திலைத் தாவரங்கள் ஆகும். (...............)
3) தாமரை இலங்கையின் தேசிய மரமாகும். (...............)
4) தேங்காய் நீர் மூலம் பரம்பலடையும் வித்தாகும். (...............)
5) சிங்கம் வீட்டில் வளர்க்கப்படும் மிருகமாகும். (...............)
6) பசு ஒரு தாவர உண்ணியாகும். (...............)
7) மீன்கள் பூக்கள் மூலம் சுவாசிக்கின்றன. (...............)
8) டெங்கு நுளம்பினால் ஏற்படுகின்றது. (...............)
9) புரதம் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய உணவாகும். (...............)
10)  முதலாம் வகை நெம்புகோல் ஆகும். (...............)

**✻ 4) பின்வரும் ஆங்கிலச் சொற்களை தமிழில் எழுதுக.**

1) VICE PRINCIPAL ....................
2) BANANA ....................
3) GOAT ....................
4) PARROT ....................


**✻5) பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

காடும் வயலும் இன் நாளில்
கண்டபடிக்கு அழிவதுடன்
கூடும் குப்பை கூளங்களால்
குடிநீர் கெட்டும் வருகிறதாம்!


நல்ல காற்றை நமக்காக
நாளும் தருகின்ற நல் மரங்கள்
இல்லை என்று ஆவதனால்
என்றும் பசுமை அழிகிறதாம்.
அழகனார்.

1) இப்பாடலைப் பாடிய கவிஞர் யார்? ..............................
2) இப் பாடலில் உள்ள இணைமொழி யாது? ..............................
3) நல்ல காற்றை நமக்குத் தருவது எது? ..............................
4) குடிநீர் எதனால் கெட்டு வருகிறது? ..............................
5) ' 'இல்லையென்று'' என்பதைப் பிரித்தெழுதுக? ..............................

**✻ 7) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**




1) பின்வரும் எண்சட்டம் காட்டும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

2) 

இந்தக் காணியைச் சுற்றி 10m இடைவெளிக்கு ஒரு தூண் நடுவதாயின் எத்தனை தூண்கள் தேவை?

3) 8.5 kg சீனியை 850g கொண்ட எத்தனை பொதிகளாகக் கட்டலாம்?

4) 1.5 kg சீனியின் விலை ரூபா 84.00 எனின், 250g சீனியின் விலை யாது?

5) 100l கொள்ளக்கூடிய தொட்டி ஒன்றில் 2/5 பங்கிற்கு நீர் உண்டு. தொட்டியை நிரப்ப இன்னும் எத்தனை லீற்றர் நீர் தேவை?

6) ஒரு ஆட்டுக்கு ஒரு வாரத்துக்கு 20kg தவிடு தேவையெனில், 3 ஆடுகளுக்கு இரண்டு வாரத்துக்கு எவ்வளவு தவிடு தேவை?

7) ஒரு டசின் பென்சில்களின் விலை ரூபா 90.00 எனில், 10 பென்சில்களின் விலை யாது?

8) ஒரு பாடசாலையில் 2742 மாணவர் உள்ளனர். இரண்டாவது பாடசாலையில் முதலாவதை விட 135 மாணவர்கள் கூடுதலாக உள்ளனர். இரண்டு பாட சாலையிலும் உள்ள மாணவர்களின் தொகை யாது?

9) ஒரு பேருந்தில் 60 பிரயாணிகள் பயணம் செய்யலாம். 195 பயணிகள் பிரயாணம் செய்ய எத்தனை பேருந்துகள் தேவை?

10) ஒரு கயிற்றில் மஞ்சள், சிவப்பு, நீலம் எனக் கொடிகள் வரிசையாகக் கட்டப்பட்டி ருந்தன. 42ஆவது கொடியின் நிறம் என்ன?

**✻ 8) பின்வரும் பூச்சிகளின் பெயரை தரப்பட்ட படங்களின் கீழ் எழுதுக.**



1).................... 2).................... 3).................... 4)....................

**✻ 9) ஒரு விளையாட்டின் போது செய்யப்படும் செயற்பாடுகளைப் பின்வரும் வரிப்படங்கள் காட்டுகின்றன. அதன் கீழ் அதன் செயற்பாடுகளை சுருக்கமாக எழுதுக.**



1).................... 2).................... 3)....................

**✻ 10) பின்வரும் வினாக்களுக்குப் புள்ளிக்கோட்டில் விடை தருக.**

1) பத்தாவது ஆண்டு நிறைவு விழா எவ்வாறு அழைக்கப்படும்?..............................
2) முச்சுடர்கள் எவை? ..............................
3) முள் + செடி என்பதைச் சேர்த்து எழுதுக.? ..............................
4) "இரக்கப்போனாலும் சிறக்கப்போ" என்ற பழமொழியின் கருத்தினை எழுதுக.? ..............................
5) உயிர் எழுத்துக்கள் எத்தனை?..............................
6) கண்வளர்த்தல் என்ற மரபுத்தொடரின் பொருள் யாது?..............................
7) "கவனமாகப் படி" என்ற வாக்கியத்தின் எழுவாயினை எழுதுக?..............................
8) ம.ப.பா என்ற சுருக்கக் குறியீட்டினை விபரித்து எழுதுக?..............................
9) 10/100 ஐ எளிய வடிவத்தில் எழுதுக?..............................
10) 15ஐ உரோம எண்ணில் எழுதுக? ..............................
11) இலங்கையின் இயற்கைத் துறைமுகம் எது? ..............................

**✻ 11) பின்வரும் கதையை ஆறுவாக்கியங்களில் பூர்த்திசெய்க.**

(ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் அமைதல் வேண்டும்)

நல்ல மாரிகால நேரம் மாலை ஆறு மணியாக இருந்தது. என்னையும் அக்காவையும் படிக்கவிட்டுவிட்டு அம்மாவும் அப்பாவும் அருகே உள்ளே கோயிலுக்குப் போய்விட்டனர். நானும் அக்காவும் வீட்டுக்குத் தீபம் ஏற்றி வழிபட்டுவிட்டு, எமது பாடத்தைப் படித்துக்கொண்டிருந்தோம். திடீரெனப் பலத்த காற்று வீசி யன்னல் கதவு படார் என அடித்தது.
..................................................

**விடைகள் வெள்ளியன்று வெளிவரும்**

# யுனிசெப், நிகொட் உதவியுடன் ஆசிரியர்களுக்குப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த நான்கு வருடங்களில் நியமிக்கப்பட்ட சுமார் 6 ஆயிரம் ஆசிரியர்களில் - பயிற்சி பெறாதவர்களுக்கான பயிற்சியை மாகாணக் கல்வி அமைச்சு யுனிசெப், நிகொட் ஆகியவற்றின் உதவியுடன் வழங்கவுள்ளது.

அத்துடன் ஊட்டச்சத்துக் குறைவு காரணமாகவும் யுத்தம் மற்றும் அனர்த்தங்களாலும் உளம் பாதிக்கப்பட்டு கற்கக் கூடிய மனநிலையில் இல்லாத மாணவர்களுக்கும் உலக உணவுத்திட்டத்தின் கீழ் மதிய உணவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் 36 ஆயிரம் பேர் பணி புரிகின்றனர். அவர்களில் 30 ஆயிரம் பேர் ஆசிரியர்களாவர். வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவியதையடுத்து, கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 6 ஆயிரம் பேர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். இதனால் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தியடைந்தது.

தரமான கல்வியை வழங்குவதில் நாம் சவாலை எதிர்நோக்குகின்றோம். புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி மற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் புதிதாக நியமிக்கப்பட்டவர்களில் ஆயிரம் பேருக்கு முதற்கட்டமாக பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அறிவொளி முன்பள்ளியின் விளையாட்டு போட்டி!


யாழ்ப்பாணம் —

ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளி சிறுவர்களின் வருடாந்த விளையாட்டு விழா - எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வண்ணை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - முன்பள்ளி கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாண லயன்ஸ் கழக தலைவர் த.அன்பானந்தன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை சன சமூக நிலையங்களின் மேற்பார்வையாளர் ரி.சோமசுந்தரம், முன்பள்ளி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சு.வீரசிங்கம், வைத்திலிங்க வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் கதிர் செல்வநாயகம், உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலய ஆசிரியர் சந்திராதேவி சிவலிங்கம், கல்வி சார் திட்ட முகாமையாளர் ஏ.பேரின்பநாதன், வைத்திலிங்க வித்தியாலய அதிபர் புஸ்பவதி சண்முகராசா, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய பிரதேச இணைப்பாளர் கார்த்தியாயினி சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சிறுவர் பகல் பராமரிப்பு இல்லம் உரும்பிராயில் திறந்து வைப்பு!



உரும்பிராய் —

மழலைகள் பகல் பராமரிப்பு இல்லம் உரும்பிராய்தெற்கு, செல்வபுரம் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

விவசாயம் மற்றும் கூலித்தொழில்களில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களின் பிள்ளைகளைப் பராமரிக்கும் நோக்கில் இந்த இல்லம் உருவாக்கப்பட்டது. இந்த இல்லத்தை கியோஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட உழைப்பாளர் சங்கம் இணைந்து ஆரம்பித்துள்ளது.

இதில் 30 பிள்ளைகளுக்கு மேல் பயனடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீடமைப்புக்கான கொடுப்பனவு

நல்லூர் —

ஐ.நா.அபிவிருத்தி வீடமைப்புத் திட்டத்தால் நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் கீழ் வாழும் குடியிருப்பாளர்களுக்கு வீடமைப்புக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஜே/99 (வண்.வடமேற்கு) ,ஜே/104 (சங்கிலியன் தோப்பு), ஜே/118 (கோண்டாவில் மத்தி), ஜே/125 (கொக்குவில் மேற்கு), ஜே/126 (கொக்குவில் மத்தி. கிழக்கு) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 169 குடியிருப்பாளர்க ளில் 156 குடியிருப்பாளர்களுக்கே இந்த முதல்கட்ட கொடுப்பனவு வழங்கப் பட் டது.

மேலும் 70 பேருக்கான கொடுப்பனவுகள் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச செயலர் எஸ்.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

# நெடுந்தீவு கோட்ட மட்டத்திலான ஆங்கிலதின போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

**பார்த்தெழுதுதல்**

தரம் 03 - 1 ஆம் இடம்: ஞா.நிதர்சினி ( மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் கே.கோபிசன் (சைவப் பிரகாச வித்தியாலயம்).

தரம் 4 - 1 ஆம் இடம்: சி.கிந்துஷன் (சைவப் பிரகாச வித்தியாலயம்), 2 ஆம் இடம்: அ.புஸ்பகுமார் (சீக்கிரியாம் பள்ளம் அ.த.க. வித்தியாலயம்).

தரம் 5 - 1 ஆம் இடம்: ஜெ.ருஷாந்தினி (சீக்கிரியாம் பள்ளம் அ.த.க. வித்தியாலயம்), 2 ஆம் இடம்: அ.சாந்தரூபி (சைவப் பிரகாச வித்தியாலயம்).

தரம் 6 -1 ஆம் இடம்: கே.சாலிகா (சைவப் பிரகாச வித்தியாலயம்), 2 ஆம் இடம்: யோ.வலன்ரீனா (றோ.க.ம. கல்லூரி).

தரம் 7 -1 ஆம் இடம்: தோ.சாலினி ( மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம்: நா.மேரிகொன்சலா (றோ.க.ம. கல்லூரி).

தரம் 8 - 1 ஆம் இடம்: டா.சில்பேபியா (றோ.க.ம. கல்லூரி), 2 ஆம் இடம்: தோ. ஜஸ்ரின்ஜெஸ்ரி ( மகா வித்தியாலயம்).

தரம் 9 - 1 ஆம் இடம்: சி.மதுஷா ( மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம்: அ.பிரதீபா (றோ.க.ம. கல்லூரி).

தரம் 10 - 1 ஆம் இடம்: அ.ஜரின்ஜூட் (மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம்: நோ.ஜெனற் ரஜீவன் (மகா வித்தியாலயம்).

தரம் 11 - 1 ஆம் இடம்: சி.கிறேஸ் ஜொயலா (றோ.க.ம. கல்லூரி), 2 ஆம் இடம்: பி.திலக்மிலன் (மகா வித்தியாலயம்).

தரம் 12- 1 ஆம் இடம்: மே.உதயதர்சினி (சைவப்பிரகாச வித்தியாலயம்), 2 ஆம் இடம்: யோ.யூட்ஸ்மேரி (மகா வித்தியாலயம்).

தரம் 13 - 1 ஆம் இடம்: யே.பிறின்சி (றோ.க.ம கல்லூரி), 2 ஆம் இடம்: க.றஜீவ் பிரகாஷ் (மகா வித்தியாலயம்).

**தயார்படுத்தி எழுதுதல்**

தரம் 6 - 1 ஆம் இடம்: பு.நிவேதா (றோ.க.ம. கல்லூரி).

தரம் 10 - 1 ஆம் இடம்: வே.சதானந்தி (றோ.க.ம. கல்லூரி).

தரம் 11 - 1 ஆம் இடம்: சி.கிறேஸ் ஜொயலா (றோ.க.ம. கல்லூரி).

தரம் 12 -1 ஆம் இடம்: சி.கிறேஸ் பபியலா (றோ.க.ம. கல்லூரி).

முற்றும் (113)



யாழ். மாவட்ட சர்வோதய சாந்திசேனா செயற்திட்டத்தின் கீழ் - செயற்படுத்தப்பட்டு வரும் இன, மத, சமூக ஒற்றுமைக்கான விளையாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக தெரிவு செய்யப்பட்ட கொட்டடி கிராமத்துக்கு சர்வோதய மாவட்ட இணைப்பாளர் ஏ.கே.சிவசுப்பிரமணியத்தால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

# நல்லூரில் இன்று

மானிப்பாய் —

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 3 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்த நிகழ்வில் - 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்னும் கருப்பொருளில் இளம் சொற்பொழிவாளர் சீ.சசீவன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். இதனைத் தொடர்ந்து கோண்டாவில் ஸ்ரீ சிவசாமி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை இடம்பெறும்.

(100)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : இ.வேனுஜன்
முகவரி : அச்சுவேலி.

### அகவை ஒன்று



பெயர் : ச.வேனுஷன்
முகவரி : ஊர்காவற்துறை.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ..........
முகவரி ..........
பிறந்த ஆண்டு ..........

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்


# உலக உணவு திட்டத்தின் கீழ் நெடுந்தீவில் அபிவிருத்தி

நெடுந்தீவு —

உலக உணவு திட்டத்தின் கீழ் - நெடுந்தீவுப் பிரதேசத்தில் இந்த வருடம் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நெடுந்தீவு வடக்குப் பகுதியின் கிழக்கு, மத்தி ஆகிய கரையோரப் பிரதேசங்களில் கடற்தடுப்பணைகள் அமைத்தல், நெடுந்தீவு சமுர்த்தி வங்கிச் சங்க காணி மண் நிரப்புதல், பெருக்குமர வீதி புனரமைப்பு, பனங்காணி கானாமுனை வீதி புனரமைப்பு, கானாமுனை ஒற்றைப் பனையடி வீதி புனரமைப்பு போன்ற வேலைத் திட்டங்களே முன்னெடுக்கப்படவுள்ளன. (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பொதுச் சபைக்கூட்டம்

நெடுந்தீவு —

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான கிளைப் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவியாளர் பணிமனையால் அறிவிக்கப்பட்டுள் ளது.

அன்றைய தினம் நெடுந்தீவிலுள்ள ஏழு கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவும் இடம்பெறவுள்ளதுடன், ஒரு கிளைக் குழுவில் ஒன்பது உறுப்பினர்கள் வீதம் தெரிவுசெய்யப்படவுள்ளனர். (113)

## முடிவுகள் வெளியாகவில்லை

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய தமிழ் இலக்கியப் போட்டி முடிவுகள் - உரிய காலத்தில் வெளியிடப்படாமையால் சம்பந்தப்பட்ட கலைஞர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த முடிவுகள் தாமதமாவதற்கு அதிகாரிகளின் அக்கறையின்மையே காரணம் எனவும், உரிய காலத்தில் போட்டி முடிவுகள் தேசிய மற்றும் மாகாண மட்டங்களுக்கு அனுப்பப்படாவிட்டால் போட்டி நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை என்று கலைஞர்கள் தரப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தால் மாதம் தோறும் நடத்தப்படும். கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

## குத்தகை ரத்து

யாழ்ப்பாணம் —

நல்லூர் பிரதேச சபைக்குரிய கொக்குவில் சந்தைக்குத்தகை - குத்தகைகாரர்களிடம் இருந்து ரத்துச் செய்யப்பட்டு தற்போது பிரதேச சபையினரால் நடத்தப்படுவதாக அறிவிக் கப் பட்டுள்ளது.

## விளையாட்டு விழா

இளவாலை —

இளவாலை காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலைய நுண்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

# மன்னார் பிரதான பாலத்தை திருத்த ஜப்பானின் ஜெய்க்கா குழு வருகை

மன்னார்—

மன்னார் நகர நுழைவாயில் பாலம் புனரமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனத்தைச் சேர்ந்த 12 பேரடங்கிய தொழில் நுட்ப வியலாளர்கள் மன்னாருக்கு வருகை தந்துள்ளனர். இவர்கள் அரச உயரதிகாரிகளைச் சந்தித்ததுடன், குறித்த பாலத்தையும் பார்வை யிட்டனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை அரசஅதிபர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் -மன்னார் பிரதேச செயலாளர் ஸ்ரான்லி டிமெல், தலைமை பொறியியலாளர் ஜோய்ஸ் குரூஸ், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் ஜிப்றி, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தஸ்மதல்ல, பொலிஸ் பரிசோதகர் சிறில்பாலு, திட்டப்பணிப்பாளர் பத்திநாதன் மற்றும் ஜெய்க்கா நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர் குழுவும் கலந்து கொண்டது.

கொழும்பில் இரண்டு வார காலம் தங்கியிருக்கும் ஜெய்க்கா தொழில்நுட்பவியலாளர் குழு பாலத்தை விரைவாகப் புனரமைப்பது தொடர்பான ஆரம்ப வேலைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மோ)

# சிறப்புற நடைபெற்ற தமிழ்த்தின விழா!

கிளிநொச்சி—

தமிழ் மொழிதின விழா கிளிநொச்சி பளை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் - பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் அமீர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரரின் சகோதரியும் ஆசிரியையுமான சாந்தினி ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடரை பங்குத்தந்தையும் வட - கிழக்கு மனித உரிமைகள் செயலருமான அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார், பளைக்கோட்ட அரசியற்துறை பொறுப்பாளர் மேனன், பளைக்கல்விக் கோட்டப் பொறுப்பாளர் இராமலிங்கம் ஆகியோர் ஏற்றினர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை பங்குத்தந்தை கருணாரட்ணம் அடிகள் ஆற்றினார். சிறப்புரையை யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார். (கு)

# அமினோ பீனோன் உர பாவனை பரீட்சார்த்த முயற்சி வெற்றி!

கிளிநொச்சி—

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயற்கை உரமான அமினோ பீனோன் உரத்தை சிறுபோக பயிர்ச் செய்கையில் பயன்படுத்தியதில் பெரு வெற்றி கிடைத்துள்ளது.

வடக்கு - கிழக்கு கிராமிய அபிவிருத்திச் சேவை நிறுவனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்தே இந்தச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டன.

அமினோ பீனோன் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி நெல் மற்றும் சிறுதானியப் பயிர்களை உற்பத்தி செய்ததில் ஏனைய உரத்திலும் பார்க்க பயிர்வளர்ச்சி நன்றாக உள்ளதுடன், அறுவடையில் நல்ல விளைச்சல் கிடைத்துள்ளதெனவும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் தெரிவித்தனர். (கு)

# போரினால் பாதிப்படைந்த சிறுவர் விளையாட்டுப் போட்டி

சுதுமலை—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அதன் மைய நிறுவனங்களில் ஒன்றான நீடோ நிறுவனத்தால் நடத்தப்படும் போரால் பாதிக்கப்பட்ட சிறுவர் இல்லத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவும், கலை நிகழ்வும் மற்றும் விளையாட்டுப் போட்டியும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வறுமைக் கோட்டுக்குட்பட்ட போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கான தொழிற்பயிற்சியை வழங்கிவரும் நீடோ நிறுவனம் அதன் இரண்டாவது ஆண்டு நிறைவில் மாணவர்களுக்கு இடையில் விளையாட்டுப் போட்டியையும், கலை நிகழ்வுகளையும் நடத்தியது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

தொடர்ந்து மங்கள விளக்கை தமிழீழ தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த அறிவழகன், திலீபன் மருத்துவ சேவையைச் சேர்ந்த தேவா அன்ரி, நிறுவனத் தலைவர் மாணிக்கம் ஆகியோர் ஏற்றினர்.

முல்லை, மருதம், குறிஞ்சி, என மூன்று இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முல்லை இல்லம், குறிஞ்சி இல்லம், மருதம் இல்லம் முறையே 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (91)

# பற்களைப் பாதுகாப்போம் ஒளிப்பேழை வெளியீடு!

கிளிநொச்சி—

தமிழர் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் "பற்களைப் பாதுகாப்போம்" பற்பராமரிப்புப் பற்றிய விபரண ஒளிப்பேழை வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் அருண் தலைமை தாங்கினார்

நிகழ்வில் பொதுச்சுடரை தியாக தீபம் திலீபன் நினைவு மருத்துவமனைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலனும், தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகாவும் ஏற்றினர்.

ஈகச்சுடரை தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஸ்ணன், மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவசேவைகள் பணிப்பாளர் மனோஜ் ஆகியோர் ஏற்றினர்.

ஒளிப்பேழையை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத் தலைவர் பாஸ்கரன் வெளியிட ஆதவன் முன்பள்ளி இயக்குநர் மகேந்திரன் பெற்றுக்கொண்டார்.

மதிப்பீட்டு உரையை கிளிநொச்சி மாவட்ட பல்மருத்துவ அதிகாரி தவராசாவும், கருத்துரைகளை மருத்துவ கலாநிதி எழுமதி கரிகாலன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமார் ஆகியோரும் நிகழ்த்தினர்.

சிறப்புரையை தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வாமன் நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

# தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வு!


முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்ட பசுமைப் புரட்சிக்கான நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்படும் தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வு - கடந்த வெள்ளிக்கிழமை குமுழமுனையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை வலயப் பொறுப்பாளர் ஏற்றினார். பொதுச்சுடரை குமுழமுனை கிழக்கு மேற்கு கிராம அலுவலர்கள் ஏற்றிவைக்க, நிகழ்வுக்கான சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் லொயிட் வழங்கினார்.

பின்பு மாணவர்களுக்கான தையல் பயிற்சியை தையல் ஆசிரியர் ஆரம்பித்து வைத்தார். இந்தப் பயிற்சி வகுப்பு பசுமைப் புரட்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.





யுனிசெப் நிறுவனத்தால் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் முல்லைத்தீவு தாய் சேய் நலன் தொடர்பான வைத்திய அதிகாரிக்கென இரண்டு பிக் அப் வாகனங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இதில் பூநகரிக்குரிய வாகனத்தை கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நந்தகுமாரன் பெறுவதை முதல் படத்திலும், முல்லைத்தீவுக்குரிய வாகனத்தை தாய் சேய் நலன் வைத்திய அதிகாரி டொக்டர் கே.சுதர்சன் பெறு வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சுற்றுப்புறச் சூழல் கலந்துரையாடல்

வட்டக்கச்சி—

உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தில் சூழல் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை பத்து மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் இடம்பெறவுள்ளது.

இதன்படி இன்று காலை பத்து மணிக்கு யூனியன்குளம் பொது நோக்கு மண்டபத்தில் - யூனியன் குளம், காந்தி கிராமம், கோணாவில், கண்ணகைபுரம் மேற்கு, ராஜன் குடியிருப்பு, படித்த வாலிபர் திட்டம், சோலைநகர், சலோம்நகர், ஆகிய தெரிவு செய்யப்பட்ட 8 கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதில் சுற்றுப்புறச் சூழல் நிபுணர்கள் கலந்து கொண்டு திட்டம் தொடர்பான கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

# முன்பள்ளியின் விளையாட்டு போட்டி

கிளிநொச்சி—

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரோக்கிய நாதர் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வின் பொதுச்சுடரை அருட்தந்தை அன்ரன் நொக் அடிகளார் மற்றும் முதல்வர் நடராசா ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை வட்டக்கச்சி வலயப் பொறுப்பாளர் சீலன் ஏற்றினார். கியூடெக் கொடியை ஞானராசா ஏற்றினார். தமிழர் புனர்வாழ்வுக் கொடியை புஸ்பகுமாரி ஏற்றினார்.

தொடர்ந்து முன்பள்ளிக் கொடி ஏற்றப்பட்டு, விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்பின் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

# சந்தைக் கூடாரமின்மையால் வியாபாரிகள் நெருக்கடியில்

கிளிநொச்சி—

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி பொதுச்சந்தையில் மரக்கறி வியாபாரிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக சந்தைக் கட்டடங்களோ, கொட்டகைகளோ எதுவும் வியாபாரிகளுக்காக அமைத்துத் தராத நிலையில் - மழை காலத்தில் வியாபாரப் பொருட்கள் நனைவதோடு, வியாபாரிகளும் நனைந்தவாறே தமது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இதன் காரணமாகத் தாம் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருவதாக வியாபாரிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (கு)

# விவசாய குடும்பங்களுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு—

முல்லை. மாவட்ட பசுமைப்புரட்சிக்கான நிறுவனத்தினரால் முள்ளியவளை கேப்பாப்புலவு கிராமத்தில் 50 விவசாய குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்ட மாதிரிப் பயிர்ச்செய்கை திட்ட உள்ளீடுகள், விவசாய உபகரணங்கள் மற்றும் கால்நடைகள் என்பன வழங்கப்பட்டன.

வேள்ட் விசன் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட இந்த விவசாய உள்ளீடுகள் தொடர்பாக புதிய முறையிலான பயிர்ச்செய்கைத்திட்ட பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

# தண்ணீர் வழங்காமையால் பொதுமக்கள் பெரும் சிரமம்!

கிளிநொச்சி—

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி நகர்ப்பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட பாரிய தண்ணீர் தாங்கி வேலைகள் முடிவுற்ற போதும் தண்ணீர் விநியோகம் இதுவரை நடைபெறாமல் இருப்பதால் இந்தப் பகுதி மக்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இந்தப் பகுதியில் நகர்ப்பகுதி மக்கள் தண்ணீருக்காகப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அமைக்கப்பட்ட தண்ணீர் தாங்கி மூலம் விரைவாக தண்ணீர் வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு துணுக்காய் பிரதேச சபையினர் முன்வரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# வெளிப்படுத்தும் தருணம்!

எதிர்பார்க்கப்பட்டது போலவே திருகோணமலையில் கடுஞ்சமர் வெடித்திருக்கிறது. மாவிலாற்றைக் கைப்பற்றும் நோக்கில் அரச படையினர் நேற்று ஆரம்பித்திருக்கும் படை நடவடிக்கையால் நூலிழையில் தொங்கிக் கொண்டிருந்த போர்நிறுத்த உடன்பாடு - அறுந்து வீழ்ந்து விட்டதென்றுதான் சொல்ல வேண்டும்.

போர்நிறுத்த உடன்பாடு கடந்த பல மாதங்களாகவே கேள்விக்குட்பட்டிருந்தது. அரசு நிழல் யுத்தத்தை புலிகள் மீது கட்டவிழ்த்துவிட்டதன் விளைவாக - மென் தீவிர யுத்தம் ஒன்று வெடித்திருந்தது.

இதன் காரணமாக போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையிலிருந்தபோதும் - தாக்குதல்கள், மோதல்கள் ஆங்காங்கே சிறியளவில் இடம்பெற்று வந்தன. படிப்படியாக இந்த நிலை மோசமடைந்து போர்நிறுத்த உடன்பாடு - வெறும் எழுத்தளவில்தான் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

நேற்று அரச படைகள் மாவிலாற்றைக் கைப்பற்றவென ஆரம்பித்த பெரும்படை நகர்வு, கடந்த நான்கரை ஆண்டுகால போர்நிறுத்த உடன்பாட்டை முடிவுக்கு கொண்டு வந்து விட்டதாகவே கருதப்படுகிறது.

சில நாட்களுக்கு முன்னர் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் - போர்நிறுத்த உடன்பாடு செத்து விட்டது. அது வெறும் எழுத்தளவில் மட்டுமே நடைமுறையில் இருக்கிறது எனத் தெரிவித்திருந்தார்.

அதுகூட இன்று இல்லாமல் போய்விட்டது, அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கையால். மாவிலாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அரச படைகள் நகர்வது போர் நிறுத்த உடன்பாட்டை மீறுகின்ற செயல். ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் -

தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்தால் போர்நிறுத்தம் முறிவடைந்து போகுமென்ற புலிகளின் எச்சரிக்கையைக் கருத்தில் எடுக்காமல் - அரசு மேற்கொண்ட நடவடிக்கைதான் இன்றைய போர் நெருக்கடிக்குக் காரணம்.

கடந்த சில நாட்களாக புகைத்துக் கொண்டிருந்த பிரச்சினை இன்று எரிமலையாக வெடித்திருக்கிறது.

மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை என்றும், இனங்காணப்பட்ட இலக்குகள் மீதான தாக்குதல் என்றும் - அரசுப் படைகள் கடந்த சில நாட்களாகவே நடத்தி வரும் தாக்குதல்கள் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் போர்நிறுத்தம் சார்ந்த அனைத்துச் செயற்பாடுகளையும் ஸ்தம்பித நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது.

இந்தக் கட்டத்தில் - சர்வதேச சமூகம், நோர்வே அனுசரணையாளர்கள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியன தீர்க்கமான முடிவுகளை அறிவிக்க வேண்டும்.

மாவிலாறு நீரை அந்தப் பகுதி மக்கள் மறித்ததற்கு இருந்த நியாயமான காரணங்களை இராணுவ நடவடிக்கைகள் மூலம் அணுகித் தீர்வுகாண முயற்சிப்பது - சர்வதேசத்தை அவமதிக்கின்ற ஒரு விடயமாகும்.

கடந்த நான்கரை ஆண்டு காலப் போர்நிறுத்த காலத்தில் இப்படிப்பட்ட எத்தனையோ சம்பவங்கள், தமிழர் தரப்பை ஆத்திரமூட்டி பொறுமையின் விளிம்புக்கே கொண்டு சென்றிருந்தது.

ஆனால், அப்போதெல்லாம் மௌனமாக, அமைதியாக, பொறுமையாக இருந்த தமிழர் தரப்பு- இனி மேலும் அப்படி இருக்குமென சர்வதேசம் எதிர்பார்க்க முடியாது.

போரைத் தொடங்க வேண்டும் என்று கங்கணம் கட்டியே - இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவின் மீள்வருகைக்காகக் காத்திருந்து இந்தப் படைநடவடிக்கை தொடங்கப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து இது நீண்டகாலத் திட்டம் என்பது உறுதியாகியிருக்கிறது. இந்தக் கட்டத்தில் நோர்வே அனுசரணையாளர்களும் சரி, கண்காணிப்புக் குழுவும் சரி உண்மையை உலகத்துக்குச் சொல்வதைவிட - அவர்களால் வேறெதையும் சாதிக்கமுடியாது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# நல்லூர் உற்சவ புனிதத் தன்மையை அனைவரும் பாதுகாக்க வேண்டும்

## மாநகர ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம் —

நல்லூர் ஆலய உற்சவம் என்பது தமிழ் மக்களின் கலாசாரத் திருவிழா. இதன் புனிதத்தை பாதுகாப்பது தமிழ் மக்கள் அனைவரதும் கடமையாகும். எமது கலாசாரத்தை பிரதிபலிப்பதில் நல்லூர் ஆலய உற்சவம் மிக உன்னதமானது என மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது கலாசார திருவிழாவின் புனிதத்தைப் பேணுவது பொதுமக்களின் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது. இந்த கலாசார திருவிழாவின் போது மக்களை வழிநடத்த ஊடகங்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

ஆலய சுற்றாடலில் குடியிருப்போர் மாநகர சபையின் அனுமதியின்றி விழா கால வாணிபத்துக்கு வாணிப நிலையங்களை வழங்குவதை தவிர்க்க வேண்டும். இதுதொடர்பாக மாநகர சபையின் விதிமுறையை மீற அனுமதிக்க முடியாது.

மாநகர சபையால் குப்பைகூழங்களை போடுவதற்கு கழிவகற்றல் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். கழிவு போடும் பெட்டிகள் இருந்தும் அதற்கு வெளியில் கழிவுகள் மற்றும் உணவு உட்கொண்ட வாழை இலை கழிவுகளை கொட்டுவது கவலையளிப்பதாகும்.

ஆலய உற்சவ காலத்தின் போது பொதுமக்களின் நலன்கருதி தொற்று நோய்களிலிருந்து ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அதாவது கண்ட இடங்களில் துப்புதல், சலம் கழித்தல் ஏனைய இயற்கைக் கடன்களை அதற்கேற்ற விதத்தில் மேற்கொள்ளல், உணவுப் பண்டங்களை ஈக்கள் மொய்க்காது பாதுகாத்தல், சுத்தமான குடிநீரை பயன்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை கண்டிப்பாக அனைவரும் கடைப்பிடிக்கவேண்டும்.

பக்தர்களும், பொதுமக்களும் தமது உடைமைகள் களவு போவதைத் தடுப்பதற்கு ஆலய சுற்றாடலில் விழிப்புடன் செயற்படுவதன் மூலம் இதனைத் தடுக்க முடியும். அத்துடன் அதனால் ஏற்படும் அச்சங்களையும் தடுக்க முடியும்.

பாதணிகள் அணிந்து - பக்தர்கள் அங்கப்பிரதிஷ்டை செய்யும் இடத்தில் உழக்குதல், துவிச்சக்கரவண்டிகளை கோவில் வளாகத்தில் செலுத்துதல் அல்லது உருட்டிச் செல்லுதல் தவிர்க்கப்பட வேண்டும் என்பது கண்டிப்பான நடைமுறையில் உள்ளது. ஆலய வளாகத்தில் இருக்கும் குடியிருப்பாளர்களின் நலன் கருதி அவர்களது வாகனங்கள், துவிச்சக்கரவண்டிகளை உருட்டிச் செல்ல பாஸ் வழங்கப்பட்டுள்ளது.

ஆலய சுற்றாடலில் அநாதரவாக கண்டெடுக்கப்பட்ட பக்தர்களின் உடைமைகளை ஆலய மேற்குப்புறத்தில் இருக்கும் மாநகர சுகாதார அலுவலகத்தில் இயங்கும் விழாக்கால பணிமனையில் ஒப்படைக்கவேண்டும். தவறவிடப்பட்ட பொருட்களை உரியவர்கள் அங்கு அடையாளம் காட்டி பெறமுடியும்.

ஆலய வளாகத்தின் சுற்றுப்புறங்களில் சமூக சீர்கேடுகள், கேளிக்கைகளை தவிர்க்க இளைய சமுதாயம் முன்வர வேண்டும். உலகத் தமிழர் கலாசாரத்துக்கமைய யாழ்ப்பாணம் இளைய சமுதாயத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே இளைய சமுதாயமே தமிழர் கலாசாரத்தின் புனிதத்தை பாதுகாக்கும் பொறுப்பு உங்கள் கைகளிலேயே உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாவட்ட அபிவிருத்திக்குழு அமைப்பு

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் வாழும் சிறுவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் 'மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு' என்னும் புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக இயங்கிவந்த மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு, மாவட்ட சிறுவர் கண்காணிப்புக்குழு மற்றும் சிறுவர் ஊழியர் தொடர்பான குழு ஆகிய மூன்று அமைப்புகளையும் இணைத்து இந்த மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற சிறுவர் பாதுகாப்புக்குழுக் கூட்டத்திலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

சிறுவர் முன்னேற்ற அபிவிருத்தி மகளிர் அமைச்சின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தின் அடிப்படையிலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சிறுவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகப் பல்வேறு செயற்திட்டங்களை இந்த அமைப்பு முன்னெடுக்கவுள்ளது.

மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடை விலகல், பெற்றோரை இழந்த சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டால் தொழிற்திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கமுடியாத பட்சத்தில், அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்து கல்விபெற வைப்பதும், அவர்களின் எதிர்கால நலன் குறித்து தொழிற்பயிற்சிகளை வழங்குவது, சிறுவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆவணப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து யாழ். மாவட்டத்தில் உள்ள சிறுவர்களின் எதிர்காலத்தை வளப்படுத்த இந்த அமைப்பு செயற்படவுள்ளதென மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

# பதிவுகளை மேற்கொண்டோருக்கே மானிய அடிப்படையில் உரம் வழங்கல்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபடுவோர் நெற் காணி இடாப்புகளில் தமது பெயர்களைப் பதிவு செய்திருந்தால் மாத்திரமே மானிய விலையில் உரம் வழங்கப்படும் என யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

மானிய அடிப்படையில் 2006-2007 ஆம் ஆண்டுகளுக்கான காலபோக நெற்செய்கைக்கான உரத்தை வழங்குவதற்கு கமநல சேவைத் திணைக்களம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

கடந்த வைகாசி மாதம் ஆரம்பிக்கப்பட்ட நெற்காணி இடாப்புகளைத் தயாரிக்கும் பணிகள் யாவும் நேற்றுடன் முடிவடைந்தன.

50 கிலோ உரம் - 350 ரூபா வீதம் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம் —

மீசாலை, திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 7 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறமும், 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும், 10 ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறும்.

மஹோற்சவ நாட்களில் தினமும் அன்னதானம் நடைபெறும். அன்னதானத்துக்குரிய பொருட்களை அடியார்கள் கொடுத்து உதவுமாறு ஆலய தர்மகர்த்தா சபையினர் கேட்டுள்ளனர்.

# பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோருவோர் எதிர்கொள்ளும் சிக்கல்!

**பல லட்சம் பணத்தை விரயமாக்கிப் பிரித்தானியாவுக்குள் தஞ்சம் கோருவதற்கு முன்பு அவர்கள் எதிர்கொள்ள இருக்கும் அவல நிலையையும் ஏற்கனவே தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்களின் புரையோடிய பிரச்சினைகளையும் புதிதாகத் தஞ்சம் கோருவோர் அறிந்து கொள்வது நன்மையளிக்கும். இது பற்றிய ஆய்வே இது.**

*(நேற்றைய தொடர்ச்சி ...)*

தஞ்சம் கோரும் தமிழர் ஒருவர் விமான நிலையத்தில் வந்திறங்கிய நாள் முதல் அல்லது தஞ்சம் கோரிய நாள் முதலிலிருந்து அவருக்குரிய சகலவிதமான தஞ்சம் தொடர்பான சட்டப் பிரமாணங்கள் - அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் போன்றவற்றைத் தெளிவாக விளக்கம் அளிக்கச் செய்து பிரித்தானியாவில் கையாளப்படுகிற நடைமுறைகள் போன்றவற்றுக்கு விளக்கம் அளித்து தஞ்சம் கோருவதன் அடிப்படையில் எவ்வாறான தகவல்களை - ஆதாரங்களை குடிவரவு அதிகாரிகள் எதிர்பார்ப்புகள் என்பது தொடர்பான ஆலோசனைகள் - செயல்முறை உதவிகளை வழங்குவதற்காக பிரித்தானிய அரசாங்கம் பல மில்லியன் பவுண் பணத் தொகையை தமிழ் சட்டத்தரணிகளுக்கு வழங்கியது.

தமது தாயகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் - தமிழ் மொழியைப் பேசுகின்றவர்கள், இலங்கையில் இடம்பெறும் தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாதங்களை நன்கு நாளாந்தம் அறிந்து வைத்திருப்பவர்கள் - எல்லாவற்றுக்கும் மேலாக தமது இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தை மேலோங்கச் செய்து, தமிழ் சட்டத்தரணிகளின் காரியாலயங்களை அல்லது சட்டத்தரணிகளைத் தேடிப் படையெடுத்தனர் தமிழ் தஞ்சம் கோரியோர்.

1995 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு கணிப்பீட்டின்படி சுமார் 90 இலங்கைத் தமிழர்களின் சட்டத்தரணிகள் காரியாலயங்களும், சுமார் 150 இற்கும் மேற்பட்ட தமிழ் சட்டத்தரணிகளும் பிரித்தானியாவில் முக்கியமாக லண்டன் நகர் பகுதிகளில் இருந்ததாகத் தெரிகிறது. 1993 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரித்தானியாவுக்குள் தஞ்சம் கோரி உட்புகுந்த மொத்த தமிழர்களின் 98 சத வீதத்தினர்களின் தஞ்சக் கோரிக்கையைக் கையாண்டவர்கள் இலங்கையைச் சேர்ந்த தமிழ் சட்டத்தரணிகளாகும். பலத்த கடன் தொல்லைகளிலும் - குடும்ப பொறுப்புக்களை சுமந்தவர்களாகவும், ஆங்கில மொழியில் நன்கு பரீட்சயமில்லாத காரணத்தினாலும் - அடிக்கடி மாற்றமெடுத்து வந்த பிரித்தானியா, தஞ்சம் கோருவோர் குடிவரவு சட்டபிரமாணங்களையும் நன்கு புரிந்து கொள்ள முடியாமலிருந்த - தமிழ் தஞ்சம் கோருவோர் தங்களது தஞ்சக் கோரிக்கையின் பொறுப்பை முழுமையாகவே தமிழ் சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

**தமிழர் பொதுநல அமைப்புக்களும் தஞ்சம் கோரிய தமிழர்களும்**

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தஞ்சம் கோரிய தமிழர்களின் நலன்களை பேணும் தொண்டர் அமைப்புகள் சிறிய எண்ணிக்கையிலேயே இயங்கி வந்தன. 1993 ஆம் ஆண்டுக்கு முன்பு தனிப்பட்டவர்களுக்கான ஆலோசனை வழங்குவதிலும் தஞ்சக்கோரிக்கைகளைத் தயாரிப்பதிலும் இந்தத் தொண்டர் நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வந்தன. சட்டரீதியான ஆலோசனைகள் தஞ்சம் கோருபவர்களுக்கு அவசியமானதாக்கப்பட்டபோது - தமிழ் சட்டத்தரணிகளின் சேவை முழுமையாகத் தமிழ் தஞ்சம் கோருவோருக்குக் கிடைக்க ஆரம்பிக்கப்பட்டதுடன் தொண்டர் நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் தஞ்சக் கோரிக்கைகளை கையாள்வது அரிதாகி விட்டது. அதேவேளை, தஞ்சம் கோரும் தமிழர்களின் அன்றாடத் தேவைகளை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்பதில் நலன்புரி தொண்டர் அமைப்புக்களின் பொறுப்புகள் முக்கியவத்துவம் பெற்றன.

அகதிகளின் அவசிய நலன்களைப் பேணுவதற்காக பிரித்தானிய அரசாங்கம் இந்த வகையான தொண்டர் நிறுவனங்களுக்குப் பெருந்தொகைப் பணத்தை வழங்கி வந்தது. பல அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்தத் தொண்டர் நிறுவனங்களுக்குப் பண உதவிகளை வழங்கி வந்தன. 1990ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட கணிப்பீட்டின்படி சுமார் 20 இற்கும் மேற்பட்ட தமிழர் சமூகத்தின் நலன்களை பேணுகின்ற தொண்டர் அமைப்புக்கள் பல மில்லியன் பவுண் பணத்தை உதவியாகப் பெற்று வந்தது தெரியவந்தது. 1993 ஆம் ஆண்டிலிருந்து பிரித்தானிய அரசால் கொண்டு வரப்பட்ட தஞ்சம் தொடர்பான சட்ட மூலங்கள் தஞ்சம்கோரிய தமிழர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ளது. 1996 ஆம் ஆண்டளவில் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை நாடுகடத்துவதற்குரிய திட்டங்களைப் பிரித்தானிய அரசு எடுத்த போது அதற்கு எதிரான நடவடிக்கைகளில் பல தமிழ் சமூக அமைப்புகள் பெரும் பங்களிப்பைச் செய்தன.

பல சமூக அமைப்புகள் பிரித்தானிய தொண்டர் நலன் விவகார ஆணையாளரின் சில வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாகத் தங்களது சேவைகளைச் செயலாற்ற வேண்டுமென்ற கடப்பாடு இருந்ததால், தமிழ் அகதிகளின் நலன்களில் அக்கறையாக இருந்தாலும் - பிரித்தானிய அரசால் தமிழ் அகதிகளுக்கு எதிராக எடுக்கப்படுகின்ற கொள்கைகளுக்கு எதிராக பிரசார - அல்லது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாமல் இருந்தார்கள்.

சில அமைப்புகளின் நிர்வாகிகள் தமிழ் அகதிகளின் பெயரில் அமைப்புகளில் கிடைக்கும் பொது நிதியுதவிகளை தங்களது சொந்த வருமானங்களுக்காக அல்லது தங்களது சுய விளம்பரத்துக்காக பாவித்துக் கொண்டார்களே தவிர, நிராகரிக்கப்பட்டவர்களின் நலன்களுக்காக எதையும் செய்யவில்லையென்ற பரவலான குற்றச்சாட்டுகளும் இருக்கத்தான் செய்கின்றன.

லண்டனில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழர் தகவல் நிலையம் அதன் ஆரம்ப காலத்தில் இருந்து தமிழ் அகதிகளின் நலன்களில் அதிக அளவு அக்கறை காட்டி வந்தாலும், அவை தமிழ் அகதிகளின் பெயரில் பொதுப் பணத்தைப் பெற்று வந்த சில தமிழ் அகதிகள் நிறுவனங்களின் செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவை நிறைவாக இருந்தது என்பது உண்மை. தங்களது சட்டத்தரணிகளின் நடவடிக்கைகளிலும் - தமிழ் தொண்டர் நிறுவனங்களிலும் நம்பிக்கையிழந்த சில நிராகரிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் தங்களின் விவகாரங்களைத் தாங்களே கையாண்டு கொள்ளவேண்டுமென்ற முடிவுடன் ஒரு நடவடிக்கைக் குழுவை அமைத்துக் கொண்டார்கள். அவர்களது ஆரம்ப நடவடிக்கையாக பிரித்தானியா பிரதமர் அலுவலகத்தின் முன் சுமார் 5 ஆயிரம் தமிழர்களை ஒன்று திரட்டி நாடு கடத்துவதற்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினார்கள்.



பிரித்தானிய அரசின் எந்தவொரு நடவடிக்கையையும் - ஊர்வலங்களாலும், ஆர்ப்பாட்டங்களாலும் மாற்றம் கொண்டு வரவோ அல்லது நிறுத்திவிடவோ முடியாதென்பது எல்லோரும் அறிந்த உண்மையென்றாலும் - தங்களது எதிர்ப்பை இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் இந்தத் தமிழர்கள் அங்கு காட்டிக்கொண்டார்கள். பொது அமைப்புக்களிலும் அவர்களது நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக நம்பிக்கையிழந்ததினாலோ என்னவோ இந்த நடவடிக்கைக் குழுவின் செயற்பாடுகளுக்குப் தொடர்ந்து மக்கள் பங்களிப்பதைக் குறைத்துக் கொண்டார்கள். அதனால் அவர்களது சேவைகளும் முடங்கிவிட்டதைக் காணமுடிகிறது.

**இலங்கையில் போர் நிறுத்தமும், பிரித்தானிய அரசின் அணுகுமுறையும்**

பிரித்தானியாவில் இலங்கைத் தமிழர்கள் தஞ்சம் கோரிய காலம் முதல் அவர்களுடைய தஞ்சக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து சர்வதேச அகதிகளுக்காகப் பாதுகாப்பு வழங்கும் சாசனத்தின் அடிப்படையில் அகதி அந்தஸ்து வழங்குவது தொடர்பான நடைமுறைகள் மற்றைய நாடுகளில் கடைபிடிக்கப் பட்டது போன்றதாகவே பிரித்தானியாவிலும் இருந்து வருகிறது. பிற நாடொன்றில் பாதுகாப்புத் தேடுவதற்கு முக்கிய காரணிகளில் ஒன்றான ஒரு இனம் என்ற அடிப்படையில் அதாவது தமிழ் இனம் என்ற காரணத்தில் இலங்கையில் தமிழர்கள் உயிருக்குப் பாதுகாப்பற்றவர்களாக வாழ்கிறார்கள் என்பதனை பிரித்தானிய அரசோ அல்லது மற்ற எந்தவொரு ஐரோப்பிய நாடுகளோ ஏற்க மறுத்துவிட்டன.

மற்றைய முக்கிய காரணியான ஒரு அரசியல் கொள்கையைக் கொண்டதனால் அல்லது அந்தக் கொள்கையை வெறுப்பதால் அதாவது - விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றவர்கள் அல்லது உதவியவர்கள் அல்லது ஈடுபட்டவர்கள் என்ற காரணத்தால் இலங்கை அரசாங்க பாதுகாப்பு படைகளால் துன்புறுத்தப்படுகின்றார்கள் என்ப தும் - அதனால் மனித உரிமைகள் மீறப்பட்டன என்ற அடிப்படையே தமிழர்களின் முக்கிய தஞ்சக்கோரிக்கைக்கு காரணமாயிருந்தன. இதனை நம்பும் தன்மையில் நிரூபிக்கப்படும் போதுதான் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குடிவரவுப்பகுதியால் நிராகரிக்கப்பட்ட தமிழர்களின் தஞ்சக் கோரிக்கைகள் 30 முதல் 35 வீத அடிப்படையில் பிரித்தானிய நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கணிப்பீடுகள் வெளிக்காட்டின. 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பிரித்தானிய அரசு இலங்கைத் தமிழர்களின் தஞ்சக் கோரிக்கையை கையாளும் நடைமுறையில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. இதே ஆண்டு ஒகஸ்ட் மாதம் துரித கதியில் தஞ்சக் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்யும் நடைமுறைக்குள் தமிழர்களின் தஞ்ச விண்ணப்பங்களைக் கொண்டு வந்து கேம்பிறிஜ் - ஒக்கின்ரன் என்னுமிடத்தில் அமைந்திருக்கின்ற தஞ்சம் கோருவோர் வரவேற்பு முகாமில் தஞ்சம் கோருவோர் தடுத்து வைக்கப்பட்டு 2 அல்லது 3 வார காலத்தில் தஞ்சக் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு முடிவுகளும் தெரிவிக்கப்பட்டன. இந்த நடைமுறையிலும் நிராகரிக்கப்பட்டவர்கள் முன்பு போலவே குடிவரவுப் பகுதிக்கு எதிராக பிரித்தானிய நீதிமன்றில் மேன்முறையீடு செய்வதற்குரிய அனுமதி வழங்கப்பட்டு வந்தன.

2002 ஆம் ஆண்டு பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட சுமார் 4ஆயிரத்து 200 தமிழர்களின் தஞ்ச விண்ணப்பங்களில் 3 ஆயிரத்து 600 வரையிலானவை குடிவரவுப்பகுதியால் நிராகரிக்கப்பட்டது. இது 85 வீதத்துக்கும் மேலாக இருந்தது. அதேவேளை யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்பும் தமிழர்களின் வருகையில் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சியைக் காணாத பிரித்தானிய அரசு - இலங்கையை பாதுகாப்பான நாடுகள் என்ற பட்டியலில் (வைற்லிஸ்ட்) சேர்த்துக் கொண்டது. இதனால் நிராகரிப்பட்டவர்கள் பிரித்தானியாவில் இருந்து மேன்முறையீடு செய்யும் உரிமையை இல்லாமல் செய்தது. பிரித்தானியாவில் இயங்கும் அகதிகளின் நலன் பேணும் நிறுவனங்கள் - தமிழ் அகதிகளுக்காகக் கடமைபுரியும் குழுக்கள் என்று பல்வேறு அமைப்புகள் இலங்கையைப் பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் சேர்க்கப்பட்டதற்கு எதிராக பலத்த எதிரப்புக்களையும், கண்டனங்களையும் வெளிக்காட்டியிருந்தாலும் - பிரித்தானிய அரசு தனது முடிவிலிருந்து எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

பிரித்தானிய அகதிகள் பணியகத்தின் இயக்குநருக்கு பிரித்தானிய குடிவரவுக்கு பொறுப்பான அமைச்சர் எழுதிய கடிதமொன்றில் - இலங்கை பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் சேர்க்கப்பட்டாலும் - தமிழர்களது விண்ணப்பங்கள் தனித்தனியே பரிசீலனை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் முடிவெடுக்கப்படுமென்றும் குறிப்பிட்டிருந்தது. தமிழ் தஞ்சம் கோருபவர்களின் பாதுகாப்பு இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உத்தரவாதமளிக்க முடியாவிட்டாலும் கொழும்பில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழ முடியுமென்ற கொள்கையை பிரித்தானியக் குடிவரவு அதிகாரிகள், தொடர்ந்து கடைப்பிடித்து வந்துள்ளனர்.

இந்த அடிப்படையில் பல தடவைகள் நிராகரிக்கப்பட்ட தஞ்சம் கோருவோர் கொழும்புக்கு 1996ஆம் ஆண்டிலிருந்து திருப்பியனுப்பப்பட்டும் வந்துள்ளனர். தற்போது யுத்த நிறுத்தம் ஏற்பட்டதன் பின்பு கொழும்பில் தமிழர்கள் பாதுகாப்புடன் வாழமுடியுமென்ற கொள்கை மேலோங்கியுள்ளது கொழும்பில் மூன்று லட்சம் தமிழர்கள் எந்தவிதப் பயமுமின்றி வாழ்கிறார்கள் என்ற வாதம் இப்போது பிரித்தானிய குடிவரவு மேன்முறையீட்டு மன்றங்களில் அளிக்கப்பட்ட பல தீர்ப்புகளிலும் உறுதிசெய்யப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

*(தொடர்ச்சி நாளை...)*

**கலாநிதி. கண்ணமுத்து சிதம்பரநாதன் (கே.எஸ்.நாதன்) சட்டவல்லுநர்.**

# குடாநாட்டை விட்டு விரைவில் இராணுவம் விலகவேண்டும்!

## கோப்பாய் பொது அமைப்புகள் ஒன்றியம்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் விரைவில் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும். இல்லையேல் விபரீதமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என - கோப்பாய் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:-

தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் மகிந்த அரசு பிரகடனப்படுத்தாத மறைமுக யுத்தம் ஒன்றைத் திணித்துள்ளது. இதன் வெளிப்பாடு - அண்மைக்காலமாக அப்பாவிப் பொதுமக்கள் மீதான இராணுவத் தாக்குதல்கள், வெள்ளைவான் கடத்தல்கள், மாணவ மாணவிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள், சித்திர வதைகள், போர்நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கும் போராளிகளின் நிலைகள் மீதான தாக்குதல்கள் வெளிப்படுத்துகின்றன.

அரசானது சமாதானம் என்று சர்வதேசத்துக்குச் சொல்லிக்கொண்டு தமிழர்களைக் கொன்றுகுவிக்கும் மறைமுக இரட்டைவேட அரசியலில் தமிழ்மக்களைப் பகடைக்காய்களாக நகர்த்துகிறது.

இராணுவமே உனக்கு அடிமைப்பட்டு அல்லல்பட்டு அஞ்சுவதற்கு நாம் ஒன்றும் கோழைகள் அல்ல. ஆண்ட தமிழினம் - ஆளப்போகும் தமிழினம் அஞ்சா நெஞ்சமும், வீரமும் கொண்ட இனம் - கொடுமைகளையும் அநீதிகளையும் கண்டு அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து ஆளத்துடிக்கும் இனம் என்பதை நீ புரிந்துகொண்ட பல அனுபவங்கள் உனக்குச் சான்று பகர்க்கும்.

எனவே, யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் எதிரிப்படைகளுக்கு எச்சரிக்கையாகச் சொல்கிறோம். இராணுவமே ஊருக்குப் போய்விடு. அந்நியமொழி பேசி அடாவடித்தனம் புரியும் நீ - எமது மண்ணில் தொடர்ந்து இருப்பதை நாம் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம்.

சிங்கள இராணுவமே உடனடியாகக் குடாநாட்டைவிட்டு வெளியேறு. இல்லையேல் மக்கள் உனக்கு வழங்கும் உன்னத பரிசை ஏற்றுக்கொள்ளத் தயாராக இரு.

யாழ்.குடாநாட்டைவிட்டு அந்நியப் படைகள் வெளியேறும்வரை நாம் ஓயமாட்டோம் எனவும் - தொடர்ந்து எமது மண்ணில் நிலைகொண்டிருப்பாயானால் மக்கள் பொங்கியெழுந்து பாரிய தாக்குதல்கள் மேற்கொள்வார்கள் என்பதையும் சொல்லிவைக்க விரும்புகிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத மது விற்றவருக்கு ரூபா 5000 தண்டப்பணம் விதிப்பு

யாழ்ப்பாணம்—

சட்டவிரோத மதுபானம் விற்ற ஒருவருக்கு யாழ்.நீதிமன்றத்தால் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதிப் பகுதியில் சட்டவிரோத மதுபானம் விற்ற குறித்த நபரை பொலிஸார் கைதுசெய்து யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து குற்றவாளிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், இருபாலை கானான் சிறுவர் இல்லத்துக்கு தர்மப்பணமாக 3 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

## மனித உரிமை ஆணைக்குழு தலையீட்டால் பாதிக்கப்பட்டவருக்கு ஆசிரிய நியமனம்!

யாழ்ப்பாணம்—

ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றும் ஆசிரிய நியமனம் வழங்கப்படாத ஒருவருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை மேற்கொண்டதன் பலனாக அவருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது.

கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே ஆணைக்குழுவினரின் தலையீட்டால் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களை தெரிவு செய்வதற்காக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. இந்தப் போட்டிப் பரீட்சையில் இவர் நிர்ணயிக்கப்பட்ட வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தியடைந்திருந்தும் மாகாண கல்வி அமைச்சால் ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை.

இதையடுத்து பாதிக்கப்பட்ட இவர்- நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அரச உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட போதும் ஆசிரிய நியமனம் வழங்கப்பட எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் இவர் கடந்த வருடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் தனது நிலைமை தொடர்பாக முறைப்பாடு செய்திருந்தார்.

ஆணைக்குழுவினர் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது இவருக்கு ஆசிரிய நியமனம் வழங்கலாம் என கல்விச் சேவை ஆணைக்குழு சிபார்சு செய்தது. இதையடுத்து ஆணைக்குழுவினர் மாகாண கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டதையடுத்து பாதிக்கப்பட்டவருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது.

## சங்கானை மக்கள் வங்கியால் பொருட்கள் அன்பளிப்பு

சங்கானை—

மக்கள் வங்கியின் 45 ஆம் ஆண்டு நிறைவு நாளையொட்டி சங்கானை மக்கள் வங்கி கிளையால் சங்கானை வைத்தியசாலைக்கு ஒரு தொகை அன்பளிப்புப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு சங்கானை வைத்தியசாலையில் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொன்.சாம்பசிவம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - மக்கள் வங்கி சங்கானை கிளை முகாமையாளர் பொன்.அச்சுதம்பிள்ளை, வங்கி ஊழியர்கள், வைத்தியசாலை அதிகாரிகள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, குறித்த வைத்தியசாலையில் நோயாளர்கள் பொழுது போக்குக்கான பூங்கா ஒன்றை அமைத்துக்கொடுக்க வங்கி நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது. (48)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்—

உரும்பிராய் புனித மிக்கேல் சனசமூகநிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலைய தலைவர் விக்ரர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்ற தலைவி நவநீதம் ஜெகதீசன் கலந்து கொள்வார்.

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் த.மலர்மகள், வேள்ட்விசன் நிறுவன திட்ட இணைப்பாளர் ஞா.வொட்கின்சன், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை அதிபர் விக்னேஸ்வரன், கோப்பாய் பிராந்திய முன்பள்ளி இணைப்பாளர் ப.மகிழினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மருதனார்மடத்துக்கும்- சுன்னாகத்துக்கும் இடையில் கடந்த 27.07.2006 ஆம் திகதி யேசுதாசன் சந்திரசேகர் என்னும் பெயருடைய தேசிய அடையாள அட்டை, இராணுவத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் கடற்படையால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுன்னாகத்தில்-நாகம்ஸ் திரையரங்குக்கு முன்னால் அமைந்துள்ள சன்ராஜ் கொமினிகேசனில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2328)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ஜெயம் ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட் பட்டேல்


சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

மனோகரா யாழ்ப்பாணம்
நான்காவது வெற்றி வாரம்
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த
திருட்டு பயலே
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் 10.30,2.30,6.30.


DAIDO
CF 90C
4 Gear

Koyo
ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

E.mail: zmc@slt.lk


## நிலையான தீர்வதனை தரவேண்டும்



மயிலேறி வேலேந்தி வரவேண்டும்
மனமெலாம் உனைநாடி எழவேண்டும்
புயலான இருளோட்ட வரவேண்டும்
புதுவாழ்வை தமிழருக்கு தரவேண்டும்
கலையான மெய்பொருளே அருள்வேண்டும்
கதியாக எம் வாழ்வில் நீவேண்டும்
நிலையான தீர்வதனைத் தரவேண்டும்
நீயிங்கு எமையாள வரவேண்டும்.

மதுரகவி


## என்றும் உன்னையே நினைத்திட அருள்வாய் ஆறுமுகா!

இப்பிறவி தனிலுன்னை உணர்ந்து போற்றுகின்ற
செப்பரிய பேறுதந்த செவ்வேளே! சண்முகனே!
எப்பிறவி என்றாலும் உன்னையே நினைக்கின்ற
ஒப்பரிய பெரும்பேற்றை அளிப்பாயே ஆறுமுகா!

ப.மகேந்திரதாசன்




## மகிழ்வை தந்து நிற்பாய்



நல்லூர் ஊர் சுற்றி வேல்கொண்டுவர
எம்மூர் பேர்சொல்லி காவல் செய்யும்
கந்தன் வடிவழகன் வேலவன் என்று
பலபேர் கொண்டு ஒருவனான உன்னை
மறக்க மனம் இல்லை
ஒரு போதும் மறுக்கவும் முடியவில்லை
தமிழ்க் கடவுளான போதுதான்
தமிழன் நிலத்தில் நீ ஆள்கின்றாய்
வரம் வேண்டும் ஐயா
துயரம் கொண்டு நிற்கிறோம்
வாழ்வில் மகிழ்வை தந்து நிற்பாயா

## பாலகனாய் நீ வருகிறாய்

மாண்புடை மையங்கொள்
மானிடம் வாழ்ந்திடவே
மயிலேறி நீ வருகிறாய்!
இளையோர் இல் வாழ்வில்
இன்பமுடன் இருந்திடவே
இன்பமாய் நீ வருகிறாய்!
பண்புடன் பகை நீங்கி
பாச ஒளி வீசிடவே
பாலகனாய் நீ வருகிறாய்!



## உரமாக நின்று துதிப்போம்



வாழ்வோடு நீவாழ நாம் வாழ்வோம்
வேலோடு நீ சூழ நாம் ஆழ்வோம்
தோளோடு தோளாக எம்மவர் சேரும்
நாளோடு நல்ல நாளாக நெருங்கிவரும்
மனதோடு மனதாழ மண் ஆழ
கனமான களமாக சீர்செய்தாழ
உழமாக எமது நிலம் வளமாக
குலமாக ஒன்று நின்று குரலாவோம்
வரமாக நீ வந்து வளம் சேர்ப்பாய்
உரமாக நாம் நின்று உனை துதிப்போம்

3 ஆம் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்


ARUL COMMUNICATION
Sanjei Mobile Phone Technology
தமிழ் மொழிமூலமான Mobile Phone Repairing Course நடைபெறுகிறது
தொடர்புகளுக்கு :
ARUL COM
#01 Brown Road, Navalar Road Junction, Jaffna.
T.P : 222 3536, 077 3068927
[5488]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விமானத் தாக்குதல் நிறுத்தும் வரை கண்காணிப்புப் பணி இடைநிறுத்தம்

கொழும்பு—

விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படும்வரை படை நகர்வுகள் இடம்பெறும் பகுதிகளில் தமது கண்காணிப்புப் பணியை இடைநிறுத்தியிருப்பதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

விமானத் தாக்குதல்கள் மற்றும் ஏனைய படைநகர்வுகளுக்கும், தாக்குதல்களுக்கும் மத்தியில் கண்காணிப்பாளர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளமையாலே இவ்வாறானதொரு முடிவை கண்காணிப்புக் குழு எடுத்துள்ளது என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இருதரப்புக்குமிடையே தாக்குதல்கள் நடைபெறும் போது அங்கு கண்காணிப்பாளர்கள் தமது பணியை முன்னெடுப்பது அவர்களுடைய உயிருக்கும் ஆபத்தானதாக அமையலாம்.

ஆகவே, சர்வதேச கண்காணிப்பாளர்களின் பாதுகாப்புக் கருதிப் போர் நடக்கும் இடங்களில் கண்காணிப்புக்குழு தனது பணியை முன்னெடுக்காது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் தீவிரமடைந்தால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது பணியை கைவிட நேரிடும் என கண்காணிப்புக்குழுவின் பதில் பேச்சாளர் ரொபேட் நெல்சன் எச்சரித்துள்ளார்.

இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பின்லாந்தையும், டென்மார்க்கையும் தொடர்ந்து- ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தமது கண்காணிப்பாளர்களை விலக்கிக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கண்காணிப்பாளர்களை செப்ரெம்பர் முதலாம் திகதிக்குள் விலக்கிக் கொள்ளவேண்டும் என விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து வார இறுதியில்பின்லாந்தும், டென்மார்க்கும் தமது கண்காணிப்பாளர்களை விலக்குவதாக அறிவித்துள்ளன.

கண்காணிப்புக்குழுவில் இடம் பெற்றுள்ள நாடுகளில் நோர்வேயும், ஐஸ்லாந்தும் மாத்திரமே ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெறாத நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# படுகொலைகள்

## சிறுப்பிட்டியில்

யாழ்ப்பாணம் —

சிறுப்பிட்டியில் வர்த்தகர் ஒருவரின் சடலம் வெட்டுக்காயங்களுடன் நேற்று மீட்கப்பட்டது.

சிறுப்பிட்டியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரான உடுப்பிட்டி - இமையாணனைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கௌரூபன் (வயது-26) என்பவரே வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் குறித்த நபர் தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது சிறுப்பிட்டி அம்மன் கோவிலுக்கு அருகில் வைத்து படையினர் விசாரணை செய்தாகவும் அதன் பின்னர் இவர் காணாமற்போனதாகவும் தெரிவிக்கப்பட்டது. குறித்த நபர் நேற்றுக் காலை சிறுப்பிட்டியில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் சறோஜினி இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் வைத்திய பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## கோட்டையில்

யாழ்ப்பாணம் —

யாழ். கோட்டைப்பகுதியில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - கில்லி என்றழைக்கப்படுகின்ற சுமார் 50 வயது மதிக்கத்தக்க நபரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

இந்த நபர் சித்த சுவாதீனமற்றவர் எனவும், கோட்டைப்பகுதி மற்றும் பஸ்நிலையம் ஆகிய இடங்களில் தங்கியிருப்பவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவரது சடலத்துக்கு அருகில் மூன்று கைக்குண்டுகள் இருந்ததாகவும், அவை நீண்ட காலத்துக்கு முற்பட்டவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் மரண விசாரணையின் பின்னர் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சடலம் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை அடையாளம் காணக்கூடிய வகையில் எந்தவொரு ஆவணங்களும் காணப்படவில்லை.

இதேவேளை, இந்த நபர் படையினர் மீது கைக்குண்டு வீச முற்பட்ட போது - படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலையில்

திருகோணமலை—

திருகோணமலையில் நேற்று இருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நெல்சன்புரவிலுள்ள மின்பொறியியலாளர் அலுவலகத்துக்கு அருகில் வைத்து நேற்றுக்காலை 9.45 மணியளவில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஹேரவ தேவககே 'அசந்த லக்ஷ்மன்என்ற 30 வயது நபரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இதேவேளை, செல்வநாயகபுரத்தில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் லொறிச் சாரதியான லலித் நந்த சிறி என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த இரு கொலைகளும் பிஸ்ரல் துப்பாக்கிகளைப் பயன்படுத்தியே நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அம்பாறையில்

அம்பாறை—

அம்பாறையில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மாதோட்டம் பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த போதே இவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பியோடியதாகக் கூறப்படுகிறது.

# ஹாட்லி மாணவனை காணவில்லை

யாழ்ப்பாணம் —

பருத்தித்துறை - தும்பளைப் பகுதியில் மாணவர் ஒருவர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தும்பளையைச் சேர்ந்த ஹாட்லிக் கல்லூரி உயர்தர மாணவனான ஜெகதீஸ்வரன் - கஜேந்திரன் (வயது 18) என்பவரே காணாமற்போயுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் வீட்டிலிருந்து நண்பர் ஒருவரின் வீட்டுக்கு சென்றதாகவும் அதன் பின்னர் வீடு வந்து சேரவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவன் படையினரால் கைதுசெய்யப்பட்டிருக்கலாம் என அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

# இராணுவ அதிகாரி கிளைமோரில் காயம்


மன்னார்—

மன்னார் - நானாட்டானில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் படுகாயமடைந்தார்.

வங்காலை - நானாட்டான் வீதியிலுள்ள வஞ்சியன் குளத்தில் ரோந்து சென்ற படையினர் மீதே நேற்றுக் காலை 6.45 மணியளவில் இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் லெப்டினன்ட் தர இராணுவ அதிகாரி ஒருவர் படுகாயமடைந்தார். இவர் உடனடியாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஆபத்தான நிலையில் அநுராதபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

# குடாநாட்டு பாடசாலைகள் நேற்று செயலிழப்பு!




யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டு பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளை மாணவர்கள் நேற்று முற்றாக புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பாடசாலைகளில் மாணவர்களது வரவின்றி இருந்ததால்- ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள்ளையே காணக்கூடியதாக இருந்தது.

கடந்த 28 ஆம் திகதி கே.கே.எஸ் வீதியில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலையடுத்து படையினர் மேற்கொண்ட தாக்குதலில் யாழ்.இந்துக் கல்லூரி உபஅதிபர் படுகாயமடைந்திருந்தார்.

கல்வியியலாளர்கள் மீது படையினர் மேற்கொண்டு வருகின்ற அத்துமீறல்கள் அதிகரிப்பதைக் கண்டித்து நேற்றைய தினம் யாழ்.குடாநாட்டு பாடசாலை மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை புறக்கணித்தனர்.

இந்த புறக்கணிப்புப் போராட்டத்துக்கான அழைப்பை தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மாவிலாறில் கடும் சமர்...

கல்லாறு முகாமிலிருந்து காட்டுப் பகுதியூடாகவும், கல்லாறிலிருந்து கிழக்காகவுள்ள ஈச்சிலம்பற்றை நோக்கியும் -

கல்லாறுக்கு மேற்காகவுள்ள திருமங்கள இராணுவ முகாமிலிருந்து - தெற்கேயுள்ள அங்கோடை என்ற காட்டுப்பகுதி நோக்கியும் ஏக காலத்தில் படையினர் முன்னேறத்தொடங்கினர்.

இராணுவத்தினருக்கு உதவியாக விமானப் படையின் கிபிர் மற்றும் மிக் ஜெட் பேர் விமானங்களும், எம்.ஐ.24 ரக தாக்குதல் ஹெலிகளும் உக்கிர வான் தாக்குதல்களை நடத்தின.

மேலும் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களுடன், பல்குழல் பீரங்கித் தாக்குதல்களும் உக்கிரமாக மேற்கொள்ளப்பட்டன.

முன்னேறிய இராணுவ அணிகளை வழிமறித்து - திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தின் நெறிப்படுத்தலில், புலிகளின் முறியடிப்பு அணிகளும் தமிழீழதேசியத் துணைப்படை மற்றும் மக்கள் படை அணிகளும் உக்கிர முறியடிப்புத் தாக்குதலை நடத்தின.

படையினரின் நகர்வைத் தடுக்கும் நோக்கில் புலிகளின் பீரங்கிப் படைப்பணியும் கடுமையான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பித்த இந்தச் சமர் நண்பகல் வரை உக்கிரமாக நடைபெற்றது. நண்பகலுடன் நகர்வை நிறுத்திக் கொண்ட படையினர் மீண்டும் பிற்பகல 2 மணியளவில் இரண்டாம் கட்ட நகர்வை ஆரம்பித்தனர்.

நேற்று மாலை வரை நீடித்த கடும் சமரின் பின்னர் இராணுவத்தினர் தமது பழைய நிலைக்கே திரும்பிச் சென்றதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றைய மோதல்களில் இரு அதிகாரிகள் உட்பட 20 படையினர் கொல்லப்பட்டதாகவும் - சுமர் 50 பேர் வரை காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்ததாகவும் - மேலும் மூவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமது தரப்பில் 2 அதிகாரிகள் உட்பட 10 படையினர் கொல்லப்பட்டதாகவும் 15 பேர் காயமடைந்ததாகவும், இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளதுடன் - புலிகள் தரப்பில் 35 பேர் வரை உயிரிழந்ததாகவும் படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

காயமடைந்த படையினரில் ஒருவர் இராணுவ அதிகாரியாவார். காயமடைந்தவர்கள் முதலில் சேருநுவர வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து பொலனறுவ, கொழும்பு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டனர். மாவிலாறில் கடும் சமர் வெடித்ததையடுத்து - சேருநுவர பகுதியிலுள்ள பாடசாலைகள் நேற்று பதற்றநிலையால் மூடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளிடம்...

இந்திய அரசினால் வழங்கப்பட்ட இந்திரா என்ற ரேடார் கருவிகள் வடமத்திய மாகாணத்தில் பொருத்தப்பட்டிருப்பதால் விடுதலைப் புலிகளின் விமானப்படை பிரிவு பற்றிய தகவல்களைக் கண்டறியக் கூடியதாகவுள்ளதாகவும் அந்த பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாகர்கோவிலில்...

படையினர் பதில் தாக்குதல் நடத்தி முறியடித்ததாகவும் இராணுவத் தரப்பு கூறியுள்ளது.

இதேவேளை, நேற்று அதிகாலை 4மணிமுதல் நாகர்கோவில் பகுதிகளிலிருந்து படையினர் - மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது ஆட்லறி, மோட்டார் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகப் புலிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல்களில் ஏற்பட்ட சேத விபரமெதுவும் வெளியாக வில்லை.

## கட்டப்பிராயில்...

தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலையடுத்து படையினர் தொடர்ச்சியான துப்பாக்கிச் சூடு நடத்தினர். அத்துடன், பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்தும் சில மணிநேரம் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அதிரடிப் படை...

இந்தச் சம்பவத்தை உறுதிப்படுத்திய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்.

## மாவிலாறை...

நீரை திறந்துவிட நடவடிக்கை எடுப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை முன்னேறும் துருப்புகளுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வகையில் பல்குழல் பீரங்கிகளைப் பயன்படுத்தியதாக சேருநுவர பொலிஸ் நிலைய பொறுப்பாளர் குணதிலக தெரிவித்தார். மாவிலாறிலிருந்து 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அல்லை இராணுவ முகாமிலிருந்து படையினர் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

படையினரால் இந்தப் பகுதிக்குள் வேகமாக முன்னேறிச் செல்ல முடியாது. பெருமளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. மாவிலாறுக்கு அருகேயுள்ள கல்லாறிலிருந்து படையினர் மூன்று முனைகளில் தர்க்குதல்களை நடத்தி வருகின்றனர். மாவிலாறு பகுதியில் சுமார் ஆயிரம் புலிகள் நிலைகொண்டு படையினருக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போர் நிறுத்தம்...

தரப்பினரையும் சண்டையை நிறுத்தும்படி கோரியுள்ளோம்.

அரச படையினரின் தாக்குதல் உக்கிரமாகவுள்ளது. ஆகவே, இரு தரப்புக்களும் மக்களின் உயிருக்கு அச்சத்தை ஏற்படுத்துவதோடு நாட்டின் அமைதி முயற்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றனர்.

போர்நிறுத்தம் நிலவிவருகிறது என்று சொல்லுவது கடினம். இருந்தாலும் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏட்டளவில் கையொப்பமிட்ட ஒரு ஆவணமாக இருந்து வருகிறது. அதனை ஒருவரும் நீக்கவில்லை. ஆகவே, போர் நிறுத்தம் செல்லுபடியானதொன்று. அது தொடர்ந்து இருக்கும் என நாம் நம்புகிறோம்.

போர்நிறுத்த ஒப்பந்தம் செல்லுபடியற்றது என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவிக்க முடியாது. ஏனெனில் போர்நிறுத்த ஒப்பந்தம் என்பது இரு தரப்புக்களிடையே ஏற்பட்டதொன்று.

போர்நிறுத்தம் நடைமுறையில் இல்லை என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவிக்க முடியாது. போர்நிறுத்தத்தை இரு தரப்புமே கடைப்பிடிக்கவில்லை. ஒருபோதும் போர்நிறுத்த ஒப்பந்தம் செயலில் இல்லை என்பதை நாங்கள் அறிவிக்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.08.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.